**ஊவா மாகாண சபை - 2017**

-----------------------------------------------------

ஊவா மாகாண சபையின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 42 ஆம் இலக்க மாகாண சபைகள் அதிகாரச்சட்டத்தின் 23(1) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மாகாண சபைகள் அதிகாரச்சட்டத்தின் 23(2) ஆம் பிரிவின் பிரகாரம் இவ்வறிக்கை வழங்கப்பட்டது.

## 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

---------------------------------------------------------------------------------------------

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

## 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

-----------------------------------------------------

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 – 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக

நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் மாகாண சபையின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி மாகாண சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

---

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

**2. நிதிக்கூற்றுக்கள்**

---

**2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

---

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினைத் தவிர, ஊவா மாகாண சபையின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 மாகாண சபை நிதியம்

மீளாய்வாண்டிற்கான மாகாண சபை நிதியத்தின் கணக்கு 2017 மார்ச் 31 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

#### 2.2.2 ஏனைய கணக்குகள்

2017 மார்ச் 31 ஆம் திகதியில் உள்ளவாறு மீளாய்வாண்டிற்கான மாகாண சபையின் ஏனைய கணக்குகளைச் சமர்ப்பித்தல் முன்னேற்றம் கீழே தரப்படுகின்றது.

| | | 2017 ஆம் ஆண்டிற்குரிய | | | |
|---|---|---|---|---|---|
| | | **கணக்குகளின் மொத்த எண்ணிக்கை** | **சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகளின் எண்ணிக்கை** | **சமர்ப்பிக்கப்படாத கணக்குகளின் எண்ணிக்கை** | **முன்னைய ஆண்டுகளுக்குரிய சமர்ப்பிக்கப்படாத கணக்குகளின் எண்ணிக்கை** |
| (i) | ஒதுக்கீட்டுக் கணக்குகள் | 29 | 29 | - | - |
| (ii) | மாகாண சபை உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் | 29 | 29 | - | - |
| (iii) | வருமானக் கணக்குகள் | 01 | - | 01 | - |
| (vi) | வணிக முற்பணக் கணக்குகள் | 08 | 07 | 01 | - |
| (v) | ஏனைய நிதியக் கணக்குகள் | 10 | 10 | - | - |
| (vi) | நியதிச்சட்டக் கணக்குகள் | 02 | 01 | 01 | 01 |
| (vii) | மாகாணசபை உறுப்பினர் முற்பணக் கணக்கு | 01 | 01 | - | - |
| | | 80 | 77 | 03 | 01 |

### 2.2.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

-----------------------------------------------

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

(அ) ஊவா மாகாண சபையின் 18 நிறுவனங்களின் காணிகளின் பெறுமதி இனங்காணப்பட்டு கணக்கீடு செய்யப்படாதிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்த ரூபா 24,200,290 ஆன காணியின் பெறுமதி தொழில்சார் தகைமையுடைய மதிப்பீட்டாளர்களினால் மதிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 02 நிறுவனங்களின் ஒதுக்கீட்டுக் கணக்கின் பிரகாரம் காண்பிக்கப்பட்டிருந்த கட்டிடங்கள் மற்றும் நடைமுறை நிர்மாண வேலைகளின் பெறுமதியான ரூபா 22,619,409 தொகை நடைமுறை வேலையாக நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(இ) 09 நிறுவனங்களின் நடைமுறை வேலைகளாக நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்ட ரூபா 219,410,000 தொகை ஒதுக்கீட்டுக் கணக்குகளில் நடைமுறையல்லாத சொத்துக்களாக காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) ஒதுக்கீட்டுக் கணக்கின் பிரகாரம் நிலையான சொத்துக்கள் தன்மையல்லாத ரூபா 122,944,163 ஆன உருபபடிகள் நிலையான சொத்துக்களாக நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டு பெறுமானத்தேய்வு ஏற்பாடுகள் செய்யப்பட்டமையால் மீளாய்வாண்டின் பெறுமானத்தேய்வு ரூபா 2,474,350 ஆல் கூடுதலாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(உ) ஊவா மாகாண சபையின் வெவ்வேறு நிறுவனங்கள் மற்றும் நூலக புத்தகங்களின் பெறுமதி இனங்காணப்பட்டு நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) மீளாய்வாண்டின் இறுதியில் ஊவா மாகாண சபையின் நிறுவனங்களுக்குச் சொந்தமான கற்பனைச் சொத்துக்கள் மற்றும் இருப்புப் பெறுமதி இனங்காணப்பட்டு நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(எ) மீளாய்வாண்டின் இறுதியில் காணி கட்டளைச் சட்டத்தின் கீழ் கிடைக்க வேண்டிய வருமானம் சரியாக இனங்காணப்படாதிருந்ததுடன் நிதிக் கூற்றுக்களில் ரூபா 45,806,655 என காண்பிக்கப்பட்டிருந்த அந்த வருமானம் காணி ஆணையாளர் திணைக்களத்தின் வருமானக் கணக்கின் பிரகாரம் ரூபா 12,974,607 ஆக இருந்தமையால் ரூபா 32,832,048 ஆன வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது.

(ஏ) மீளாய்வாண்டின் இறுதியில் கிடைக்க வேண்டிய முத்திரைக் கட்டணங்கள் ரூபா 51,583,766 மற்றும் விற்பனை புரள்வு வரி ரூபா 44,424,103 தொகையும் உள்ளூராட்சி மன்றங்களுக்கு செலுத்த வேண்டிய முத்திரைக் கட்டணங்கள் மற்றும் நீதிமன்ற தண்டப்பணப் பெறுமதி என்பன இனங்காணப்பட்டு நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஐ) மீளாய்வாண்டின் இறுதியில் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்தியமைக்காக ஊவா முகாமைத்துவ அபிவிருத்தி நிறுவனத்திற்கு கிடைக்க வேண்டிய ரூபா 160,378 நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஒ) மீளாய்வாண்டின் இறுதியில் செலுத்த வேண்டிய செலவினம் ரூபா 1,124,549 நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படாதிருந்தமையால் ஆண்டின் செலவினம் மற்றும் நடைமுறைப் பொறுப்புக்கள் அப்பெறுமதியால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தன.

(ஓ) வர்த்தக முற்பணக் கணக்கு நடவடிக்கைகளுக்குரிய பெறுமானத்தேய்வு ஒதுக்கம் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஔ) மீளாய்வாண்டின் குத்தகை வட்டி இனங்காணப்படாமல் ரூபா 76,546,570 தொகையான குத்தகை தவணை மற்றும் வட்டி ஆண்டின் செலவினமாக கணக்கீடு செய்யப்பட்டமையால் குத்தகை தவணைகளின் பெறுமதியான ரூபா 71,818,216 ஆல் ஆண்டின் செலவினம் கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது.

(க்) 2018 ஆம் ஆண்டிற்காக செலுத்த வேண்டிய தேறிய குத்தகை தவணைகளின் பெறுமதி மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களில் நடைமுறைப் பொறுப்பின் கீழ் குத்தகை கடன் கொடுத்தோராக காண்பிக்கப்பட வேண்டிய போதிலும் நிதிக் கூற்றுக்களில் தேறிய குத்தகை பெறுமதி வெளிப்படுத்தப்பட்டிருந்தது.

**2.2.4 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்**

(அ) திரட்டிய நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்படும் 4 உருப்படிகளின் பெறுமதி அந் நிறுவனங்களின் ஒதுக்கீட்டுக் கணக்கில் காண்பிக்கப்பட்டிருந்த பெறுமதிகளுடன் இணங்கவில்லை.

(ஆ) 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 03 நிறுவனங்களில் தயாரிக்கப்பட்டிருந்த வர்த்தக முற்பணக் கணக்குகளில் செலுத்த வேண்டிய முற்பண மீதிகள்

குறிப்பிடப்படாதிருந்ததுடன் திரட்டிய நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் தீர்க்கப்பட வேண்டிய முற்பண மீதி ரூபா 7,769,811 ஆக இருந்தது.

(இ) பதுளை பிராந்திய சுகாதார சேவைகள் அலுவலகத்தின் மருந்துகள் தகவல் முறைமையின் பிரகாரம் மீதிகள் மற்றும் உள்ளவாறான மீதிகளுக்கு இடையே 04 உருப்படிகள் தொடர்பாக ரூபா 159,444 ஆன பற்றாக்குறையொன்றும் 04 உருப்படிகள் தொடர்பாக ரூபா 532,837 ஆன மிகையொன்றும் அவதானிக்கப்பட்டன.

(ஈ) மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டுகளுக்காக கிடைக்க வேண்டிய வீதிவரி மற்றும் ஏனைய வருமானம் ஊவா மாகாணத்தின் உள்ளூராட்சி மன்றங்களின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் ரூபா 266,263,635 ஆக இருந்த போதிலும் உள்ளூராட்சி மன்ற நிறுவனங்களினால் சமர்ப்பிக்கப்பட்ட உள்ளூராட்சி மன்றங்களின் நிலுவை வருமான அட்டவணையின் பிரகாரம் ரூபா 238,233,224 ஆக இருந்தமையால் ரூபா 28,030,411 ஆன வேறுபாடு காணப்பட்டது.

### 2.2.5 கட்டுநிதிக் கணக்கு

2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான ஊவா மாகாண சபையின் திரட்டிய நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டுள்ள 4 பிரதேச செயலகங்கள் உள்ளடங்கலாக 16 நிறுவனங்களுக்குரியதாக காணப்பட்ட தீர்க்கப்படாத கட்டுநிதி மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 50,844,567 ஆக இருந்தது. 2018 மார்ச் 31 ஆந் திகதியில் அது ரூபா 47,446,168 ஆக இருந்தது.

### 2.2.6 பொது வைப்புக் கணக்கு

2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான பொது வைப்புக்கள் மீதி தொடர்பான காலப்பகுப்பாய்வின் பிரகாரம், நிதிப்பிரமாணம் 571 இற்கமைய 23 நிறுவனங்களுக்குரிய தீர்வுசெய்யப்படாத வைப்புக்கள் ரூபா 52,465,386 ஆக இருந்தது. 2018 யூலை 15 ஆந் திகதியில் அம்மீதி ரூபா 45,512,383 ஆக இருந்தது.

### 2.2.7 மாகாண அரச உத்தியோகத்தர்களின் முற்பணக் கணக்கு

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) ஊவா மாகாண சபையின் அமைச்சுக்கள், திணைக்களங்கள் மற்றும் அலுவலகங்களுக்கு இடமாற்றம் பெற்றுச்சென்ற, மரணித்த, ஓய்வுபெற்ற,

சேவையை விட்டுச் சென்ற மற்றும் பணி நீக்கம் செய்யப்பட்ட உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 84,472,501 ஆக இருந்ததுடன், அமைச்சுக்கள், திணைக்களங்கள் மற்றும் அலுவலகங்களிலிருந்து இடமாற்றம் பெற்று வந்த உத்தியோகத்தர்களின் ரூபா 34,740,786 ஆன மீதிகள் தீர்வு செய்யப்பட்டிருக்கவில்லை. 2018 யூலை 15 ஆந் திகதியில் அம்மீதிகள் முறையே ரூபா 81,990,217 மற்றும் ரூபா 34,717,843 ஆக இருந்தன.

(ஆ) ஊவா மாகாண சுகாதார, சுதேச மருத்துவம் நன்நடத்தை சிறுவர் பாதுகாப்பு மற்றும் மகளிர் அலுவல்கள் மற்றும் சமூக நலன்புரி அமைச்சின் மாகாண அரச உத்தியோகத்தர்கள் முற்பணக் கணக்கின் ஆகக் குறைந்த செலவு எல்லை ரூபா 164,317 ஆல் அடையப்படாமல் இருந்ததுடன் கூடிய வரவு மீதி எல்லை ரூபா 280,224 ஆல் மிகைத்திருந்தது.

### 2.2.8 பெறவேண்டிய கணக்குகள்

#### (அ) விதை கிழங்கு கணக்கு

மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான மீதி ரூபா 40,405,067 தொகையாக இருந்ததுடன், 11 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக மாகாண சபையின் திரட்டிய நிதிக்கூற்றுக்களில் சொத்துக்களாக காண்பிக்கப்பட்டிருந்தன. அந்த கடன் மீதி கடன்பட்டோரிடமிருந்து மாதாந்தம் அறவிடப்பட வேண்டிய போதிலும், அது முறைப்படி இடம்பெற்றிருக்கவில்லை என்பது முன்னைய ஆண்டுகள் மற்றும் மீளாய்வாண்டின் அறவீடுகளின் பிரகாரம் அவதானிக்கப்பட்டது.

#### (ஆ) விவசாய திணைக்களத்தின் சம்பளப் பணம் காணாமற் போனமை

விவசாயத் திணைக்களத்தில் இடம்பெற்றிருந்த சம்பள நிதி மோசடியானது, 11 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் கடந்திருந்த போதிலும், 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான நிதிக்கூற்றுக்களில் குறிப்பிடப்பட்டுள்ள தீர்க்கப்படாத மீதி ரூபா 440,990 ஆகும்.

### 2.2.9 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

பின்வரும் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | பெறுமதி | இணங்காமைகள் |
|---|---|---|
| **(அ) இலங்கை சனநாயக சோஷலிசன் குடியரசின் தாபன விதிக்கோவை** | ரூபா | |
| (i) XII ஆம் அத்தியாயத்தின் 24.1 ஆம் பிரிவு | | ப/ஸ்ரீ சங்கபோதி வித்தியாலத்தின் 10 ஆசிரியர்கள் 2014 ஆம் ஆண்டு முதல் 2017 ஆண்டு வரை பாடசாலை நடைபெறும் காலப்பகுதியில் ஓய்வு விடுமுறை பெற்றுக் கொள்ளப்பட்டிருந்தது. |
| (ii) xxiv ஆம் அத்தியாயத்தின் 3.5 ஆம் பிரிவு | | ப/ சுஜாதா மஹா வித்தியாலத்தின் ஆசிரியர்கள் மற்றும் ஏனைய 7 உத்தியோகத்தர்களுக்காக மாதாந்த சம்பளத்தில் கழிப்பனவுகளின் கூட்டுத்தொகை 40 சதவீத எல்லையை மிகைத்து கடன் தொகை வழங்கப்பட்டிருந்தது. |
| **(ஆ) ஊவா மாகாண சபை நிதி விதிக்கோவை** | | |
| (I) விதி 170.2.4 | 869,600 | ஊவா மாகாணத்தின் உள்ளுராட்சி மன்ற நிறுவனங்கள் மற்றும் தொடர்புடைய சமூக சபை அங்கத்தவர்களுக்காக பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்துவதற்கு அரச சார்பற்ற அமைப்பிடமிருந்து கிடைத்த ரூபா 869,600 தொகை தொடர்பாக மாகாண திறைசேரிக்கு அறிக்கையிடப்பட்டிருக்க வில்லை. |

| | | | |
|---|---|---|---|
| (II) | விதி 371 | 145,000 | ப/ சுஜாதா மஹா வித்தியாலயத்தினால் பொருட்கள் மற்றும் சேவைகள் வழங்குவதற்காக வெளித்தரப்பினருக்கு 07 சந்தர்ப்பங்களில் முற்பணம் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. |
| (III) | விதி 705 | 300,934 | பொறுப்புக்களை தட்டிக் கழிக்கும் ஒப்பந்தக்காரர்களின் பதிவேடு பிரதான செயலாளரினால் பேணப்படா திருந்ததுடன் 06 மாதங்களுக்கு ஒரு முறை அதன் விபரங்கள் கணக்கீட்டு உத்தியோகத்தர்களினால் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்களுக்கு அறிக்கையிடப்பட்டிருக்கவில்லை. |
| (IV) | விதி 708.1 | 231,427 | பெறுகை கூட்டங்கள் முடிவடைந்தவுடன் உடனடியாக குழு உத்தியோகத்தர்களால் பெறுகை குழு தீர்மானத்திற்குரிய இணக்கப்பாட்டிற்கு அல்லது இணக்கமின்மையை குறிப்பிட்டு கையொப்பமிடப்பட வேண்டிய போதிலும் பதுளை பிரதேச சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தின் 06 பெறுகை தீர்மானங்களுக்குரிய மற்றும் மஹியங்கன ஆதார வைத்தியசாலையில் 03 தீர்மானங்களுக்கு குழு அங்கத்தவர்களினால் கையொப்பம் இடப்பட்டிருக்கவில்லை. |

**(இ) அரச நிதிச் சுற்றறிக்கை**

----------------------------------------

| | | | |
|---|---|---|---|
| (I) | 2008 திசெம்பர் 31 ஆந் திகதிய 30/2008 ஆம் இலக்கம் | 327,000 | அரச ஊழியர் ஒருவருக்காக செலுத்த வேண்டிய திரட்டிய இடர் கடன் மீதி எல்லை ரூபா 250,000 ஆக இருந்த போதிலும் மாகாண சுகாதார சேவைகள் திணைக்களத்தின் உத்தியோகத்த |

ரொருவருக்கு எல்லையை மிகைத்து இடர் கடன் வழங்கப்பட்டிருந்தது.

(II) 2016 திசெம்பர் 29 ஆந் திகதிய 30/2016 ஆம் இலக்கம்

பதுளை பிரதேச சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்திற்கு சொந்தமான 54 வாகனங்கள், நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு திணைக்களத்தின் 07 வாகனங்கள், சமூக சேவைகள் திணைக்களத்திற்குச் சொந்தமான 01 வாகனம், விளையாட்டு, இளைஞர் விவகார சுற்றுலா, போக்குவரத்து, கலாசார புடவைக் கைத்தொழில் மற்றும் சிறுகைத்தொழில் அமைச்சிற்குச் சொந்தமான 13 வாகனங்கள் தொடர்பாக எரிபொருள் எரிவு தொடர்பாக பரிசோதனையொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**(ஈ) பெறுகை செயற்பாட்டு தொடர்பான வழிகாட்டிக் கோவை**

------------------------------------------------

(I) 2.9.2 ஆம் பிரிவு

பதுளை பிரதேச சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தினால் பெறுகைக் குழுவினது அங்கத்தவர்களினதும் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் அங்கத்தவர்களினதும் வருகை மற்றும் வெளியேறல் என்பவற்றை பதிவு செய்வதற்காக பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை.

(II) 4.2 ஆம் பிரிவு

பிரதி பிரதம செயலாளர் (பொறியியலாளர் சேவை), சுகாதார சேவைகள் திணைக்களம், பதுளை பிரதேச சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகம் மற்றும் மஹியங்கன ஆதார வைத்தியசாலை என்பவற்றிற்காக பெறுகை திட்டமொன்று தயாரிக்கப் பட்டிருக்கவில்லை.

| | |
|---|---|
| (III) 8.9.1 ஆம் பிரிவு | ரூபா 250,000 இனை மிகைக்கும் வேலைகளுக்காக எழுத்துமூல உடன்படிக்கையொன்று கைச்சாத்திடப்பட வேண்டிய போதிலும் சுகாதார சேவைகள் திணைக்களத்தினால் 03 வாகனங்களை திருத்தம் செய்வதற்கு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருக்கவில்லை. |

**(உ) ஏனைய சுற்றறிக்கைகள்**

-------------------------------------

| | |
|---|---|
| 2013 நவம்பர் 28 ஆந் திகதிய 7/2013 ஆம் இலக்க கல்வி அமைச்சு செயலாளரின் சுற்றறிக்கை | பதுளை கல்வி வலயத்தின் 108 பாடசாலைகளினால் 2017 ஆம் ஆண்டிற்கான முறையாக பாடசாலை அடிப்படை தர உள்ளீடு போதியளவிலும் கட்டமைப்பிலான அபிவிருத்திக்காக திட்டமிடல் மற்றும் பெறுகை தொடர்பான நான்கு மாத கணக்கு அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவிலலை. |

**3. வருமான முகாமைத்துவம்**

-------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 13 ஆவது அரசியலமைப்பு திருத்தத்தில் மாகாண சபைகளுக்கு கையளிக்கப்பட்டுள்ள 13 வருமான விடயங்கள் தொடர்பாக ஊவா மாகாண சபையினால் நியதிகள் பிறப்பிக்கப்படாதிருந்ததுடன் 06 வருமான விடயங்கள் 2017 ஆம் ஆண்டின் நிதிக் கூற்றுக்களுக்கு உட்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மாகாண சபை நிதி விதிக்கோவையின் நி.வி 82 இன் பிரகாரம் ஊவா மாகாண சபையின் வருமான விடயங்கள் தொடர்பாக வருமான கணக்கீட்டு உத்தியோகத்தர்கள் நியமிக்கப்படாதிருந்ததுடன் நிதிப்பிரமாணம் 142.1 இன் பிரகாரம் மதிப்பிடப்பட வேண்டிய வருமானம் இனங்காணப்பட்டு 2017 ஆம் ஆண்டிற்காக வருமானம் மதிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(இ) 2017 ஆம் ஆண்டிற்காக வருடாந்த மதிப்பிட்டிற்கு உள்ளடக்கப்பட்டிருந்த 21 வருமான விடயங்களின் மதிப்பிடப்பட்ட வருமானம் குறிப்பிடப் பட்டிருக்கவில்லை.

(ஈ) ஊவா மாகாண சபையால் செயற்படுத்தப்படும் வெவ்வேறு செயற்பாடுகளுக்காக அறவிடப்படக்கூடிய 04 வருமான விடயங்களை மேம்படுத்துவதற்காக குறிப்பான நடைமுறைகள் ஸ்தாபிக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) 1990 இன் 8 ஆம் இலக்க ஊவா மாகாணத்தின் நிதிப் பட்டயத்தின் 37 ஆம் பிரிவின் பிரகாரம் ஊவா மாகாணத்தில் அமைந்துள்ள அசையாத சொத்துக்களை கையளிப்பதற்கு உரிய பத்திரங்களுக்காக அறவிடப்படும் முத்திரைக் கட்டணங்களுக்காக மாகாண இறைவரி ஆணையாளரினால் மதிப்பிடப்பட்ட மேலதிக முத்திரைக் கட்டணங்களை அறவிடும் போது மீண்டும் மதிப்பீட்டிற்காக தகைமையான துறைசார் மதிப்பீடு பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஊ) 1990 இன் 8 ஆம் இலக்க ஊவா மாகாணத்தின் நிதிப் பட்டயத்தின் 104(அ) ஆம் பிரிவின் பிரகாரம் மாகாண வருமான ஊக்குவிப்பு நிதியமொன்று தாபிக்கப்பட வேண்டிய போதிலும் நியதிச் சட்டமொன்றை நிறைவேற்றி தாபிக்கப்படாமல் 2010, 2011, 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளின் போது மாகாண இறைவரி ஆணையாளரின் அலுவலர்களுக்கு ரூபா 11,490,063 தொகை ஊக்குவிப்பு படிகளாக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

(எ) கைத்தொழில் அபிவிருத்தி திணைக்களத்தின் புடவை உற்பத்திகள் கடனுக்கு விற்பனைக்கான பணத்தை 08 சமமான தவணைகளில் அறவிடப்பட வேண்டிய போதிலும் 2017 ஆகஸ்ட் 31 ஆந் திகதியில் உள்ளவாறு நிலுவையாக இருந்த கடன் விற்பனைகளின் பெறுமதி ரூபா 2,842,145 ஆக இருந்தது. அதில் ரூபா 2,255,811 அதாவது 80 சதவீதமான அளவொன்று 10 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலம் கடந்திருந்தது.

## 4. நிதி மீளாய்வு

---------------------

### 4.1 நிதி விளைவுகள்

--------------------------

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான மாகாண சபை நிதியத்தின் நடவடிக்கைகளின் நிதி விளைவுகள் ரூபா 207,181,480 ஆன பற்றாக்குறையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 660,587,282 ஆக இருந்தது.

## 4.2 வருமானம் மற்றும் செலவினம்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டினதும் முன்னைய ஆண்டினதும் வருமானம் மற்றும் செலவினங்கள் தொடர்பான பொழிப்பொன்று கீழே காண்பிக்கப்படுகின்றது.

**வருமானம்**

| | 2017 | | | 2016 | | |
|---|---|---|---|---|---|---|
| | **பாதிடப் பட்டவை** | **உள்ளபடி யானவை** | **முரண்** | **பாதிடப் பட்டவை** | **உள்ளபடி யானவை** | **முரண்** |
| | **ரூபா** | **ரூபா** | **ரூபா** | **ரூபா** | **ரூபா** | **ரூபா** |
| **மாகாண சபை விடயங்களுக்குரிய வருமானம்** | | | | | | |
| வரி வருமானம் | 3,068,195,000 | 2,925,591,682 | (142,603,318) | 2,232,715,000 | 2,616,124,142 | 383,409,142 |
| வரியல்லா வருமானம் | 371,805,000 | 561,658,971 | 189,853,971 | 452,285,000 | 680,585,806 | 228,300,806 |
| அரசாங்க மானியம் | 18,820,751,000 | 19,456,886,980 | 636,135,980 | 20,294,797,000 | 18,587,838,770 | 1,706,958,230 |
| மொத்தம் | 22,260,751,000 | 22,944,137,633 | 683,386,633 | 22,979,797,000 | 21,884,548,718 | 2,318,668,178 |

| | 2017 | | | 2016 | | |
|---|---|---|---|---|---|---|
| | **பாதிடப் பட்டவை** | **உள்ள படியானவை** | **முரண்** | **பாதிடப் பட்டவை** | **உள்ள படியானவை** | **முரண்** |
| மீண்டெழும் செலவினம் | **ரூபா** | **ரூபா** | **ரூபா** | **ரூபா** | **ரூபா** | **ரூபா** |
| ஆளணி வேதனம் | 15,196,717,000 | 16,505,876,088 | (1,309,159,088) | 15,094,448,000 | 15,952,243,721 | (857,795,721) |
| ஏனைய மீண்டு வருபவை | 4,141,994,000 | 3,563,043,189 | 578,950,811 | 3,840,389,000 | 3,433,634,055 | 406,754,945 |
| உப மொத்தம் | 19,338,711,000 | 20,068,919,277 | (730,208,277) | 18,934,837,000 | 19,385,877,776 | (451,040,776) |
| அரசாங்க முதலீடு | 2,993,750,000 | 3,390,850,109 | (397,100,109) | 3,569,960,000 | 2,998,153,309 | 571,806,691 |
| **மொத்தம்** | 22,332,461,000 | 23,459,769,386 | 1,127,308,386 | 22,504,797,000 | 22,384,031,085 | 120,765,915 |

ஆண்டின் மொத்த வருமானம் 22,944,137,633 ஆக இருந்ததுடன் அதில் ரூபா 19,456,886,980 அரசாங்க மானியங்களாக இருந்தன. வரி வருமானம் ரூபா 2,925,591,682 அதாவது மொத்த

வருமானத்தின் 13 சதவீதமாகவும் வரியல்லாத வருமானம் ரூபா 561,658,971 அதாவது மொத்த வருமானத்தின் 2 சதவீதமாக இருந்தது. ஆண்டின் மொத்த வருமானமான 22,944,137,633 தொகையில் மீண்டெழும் செலவினத்திற்காக ரூபா 20,068,919,277 அதாவது 85 சதவீதம் அரசின் முதலீட்டிற்காக ரூபா 3,390,850,109 அதாவது 15 சதவீதம் பயன்படுத்தப்பட்டிருந்தது. 1978 அரசியலமைப்பின் 13 ஆவது அரசிலமைப்பு திருத்தத்தின் பிரகாரம் மாகாண சபைகளுக்கு கையளிக்கப்பட்டுள்ள வருமான விடயங்களிலிருந்து போதியளவு வருமானம் சேகரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 5. சட்டரீதியான சம்பவங்கள்

ஊவா மாகாண சபைக்கு எதிராக தொடரப்பட்டுள்ள இனங்காணப்பட்டுள்ள 4 வழக்கு நடவடிக்கைகளுக்காக நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 6. நிதியத்தின் மற்றும் வர்த்தக முற்பணக் கணக்குகள்

### 6.1 நிதியக் கணக்குகள்

#### 6.1.1 ஊவா மாகாணத்தின் பிரதான அமைச்சரின் நிதியம்

**முகாமைத்துவ செயற்திறனின்மை**

மீளாய்வாண்டின் வருடாந்த நிதி மதிப்பீட்டில் பிரதான அமைச்சர் நிதியத்திற்கு ஒதுக்கப்பட்ட நிதி ஏற்பாடு ரூபா 10,000,000 ஆக இருந்ததுடன், மேலதிக நிதி ஏற்பாடுகள் ஒதுக்கீடு செய்தல், மதிப்பீடு செய்யப்பட்ட நிதி ஏற்பாட்டின் 72 சதவீதமாக இருந்தது. ஆண்டின் இறுதியில் எஞ்சிய நிதி ஏற்பாடு தேறிய நிதி ஏற்பாட்டின் 20 சதவீதமான அளவாக இருந்தது. ஆண்டின் ஆரம்பத்தில் போது முறையான திட்டமொன்றின் பிரகாரம் 1993 இன் 2 ஆம் இலக்க ஊவா மாகாண பிரதான அமைச்சரின் நிதியம் நியதிச்சட்டத்தில் குறிப்பிடப்பட்ட நோக்கங்கள் தொடர்பில் தொடர்புபடாதிருந்ததாகவும் நலனாலிகளைத் தெரிவு செய்வதற்கு முறையான நடைமுறையொன்று காணப்படவில்லையாதலால் நிதி மதிப்பீட்டில் நிதி ஏற்பாடு மேற்கொள்ளும் போது முன் திட்டத்தின் பிரகாரம் தேவைப்பாடுகள் இனங்கானப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

### 6.1.2 ஊவா நவோதய நிதியம்

---------------------------------------

**செயலாற்றல்**

---------------------

1992 இன் 01 ஆம் இலக்க ஊவா நவோதய நிதியத்தின் நியதிச்சட்டத்தின் (6) ஆவது பிரிவில் குறிப்பிடப்பட்ட கீழே காட்டப்பட்ட போது நோக்கத்தை நிறைவேற்றாமல் ரூபா 27,474,518 தொகை 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு மக்கள் வங்கியின் வெளிமட மற்றும் பதுளை கிளைகளில் நிலையான வைப்புக்களில் முதலீடு செய்யப்பட்டிருந்தன.

(i) பல்கலைக்கழகங்கள், தொழில்நுட்ப கல்லூரிகள் அல்லது அது மற்றும் சமமான கல்வி நிறுவனங்களில் உயர் கல்வி பெற்றுக் கொள்ளும் மாகாணத்தின் மாணவர்களின் தேவைப்பாடுகளுக்காக நிதி உதவி மற்றும் புலமை பரிசில்களை வழங்குதல்.

(ii) விளையாட்டுத் துறையில் திறமையை வெளிப்படுத்தும் மாணவர்களின் விளையாட்டு நிபுணத்துறை மேம்படுத்துவதற்கான நிதி உதவி மற்றும் புலமைப்பரிசில் வழங்குதல்.

### 6.1.3 ஊவா தொழில் முயற்சி அபிவிருத்தி நிதியம்

--------------------------------------------------------------------------------

**(அ) இணக்கமின்மைகள்**

-------------------------------

மீளாய்வாண்டில் ‘‘பிரதேச அபிவிருத்தி வங்கி - கடன்பட்டோர்’’ கணக்கிற்கு வரவு வைக்கப்பட ரூபா 9,250,000 தொகை திசெம்பர் 31 இல் உள்ளவாறு அவ் வங்கியின் கடன் அறிக்கையின் பிரகாரம் ரூபா 8,200,000 ஆக இருந்தமையால் ரூபா 1,050,000 ஆன வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

**(ஆ) பெற வேண்டிய கணக்கு**

---------------------------------------

நிலுவைக்காலம் 08 ஆண்டுகளான ரூபா 129,101 பெறுமதியான மோட்டார் சைக்கிள் கடன் தொகை மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

### (இ) சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத் தீர்மானங்களுடன் இணங்காமை

--------------------------------------------------------------------------------

கீழே காட்டப்பட்டுள்ளசட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் மற்றும் முகாமைத் தீர்மானங்களுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் மற்றும் முகாமைத் தீர்மானங்களு டனான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) ஊவா மாகாண சபை நிதி விதிக் கோவை 133.3 மற்றும் 133.4 | நிதியத்தின் கொடுக்கல் வாங்கல் தொடர்பாக போதியளவு உள்ளகக் கணக்காய்வொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) 2000 இன் 01 ஆம் இலக்க ஊவா முயற்சிகள் அபிவிருத்தி நிதிய நியதிச்சட்டத்தின் 34 ஆம் பந்தி | ஆகக் குறைந்தது ஓராண்டிற்கு இரண்டு தடவை கூட்டங்கள் நடாத்தப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டில் ஒரு தடைவ மாத்திரம் கூட்டம் கூட்டப்பட்டிருந்தது. |

**(ஈ) செயற்பாட்டு வினைத்திறனிண்மை**

(i) 2000 இன் 01 ஆம் ஊவா முயற்சி அபிவிருத்தி நிதிய நியதிச் சட்டத்தின் 8(9) பிரிவின் பிரகாரம் நிதியத்திற்கு சாதகமானதாக தகுதியான மற்றும் தேவையான வங்கி தெரிவு செய்யப்பட்டு கணக்கு திறக்கப்பட வேண்டிய போதிலும் ‘‘ஊவா மாகாணத்தின் சபை முயற்சியாளர் அபிவிருத்தி கடன் முன்மொழித் திட்டம்’’ செயற்படுத்துவதற்காக நிதிச் சந்தையில் காணப்படும் மீள் கடன் வசதிகளை வழங்கும் கடன் நிறுவனங்களிடமிருந்து கடன் முன்மொழிவு திட்டங்கள் தொடர்பாக அறிக்கைகளைப் பெற்று மதிப்பீடு செய்து கடன் வழங்கும் இயலுமையைத் தீர்மானிக்காமல் பிரதேச அபிவிருத்தி வங்கி கடன் முறைமையை செயற்படுத்துவதற்காக தெரிவு செய்யப்பட்டிருந்தது.

(ii) 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஊவா முயற்சி அபிவிருத்தி நிதியத்தின் நிதிக்கூற்றுகளின் பிரகாரம் ஊவா முயற்சியாளர் அபிவிருத்தி கடன் திட்டத்தின் மூலம் ரூபா 9,250,000 ஆன கடன் தொகை வழங்கப்பட்டிருந்த போதிலும் கடன் முன்மொழிவுத் திட்டத்தை செயற்படுத்தும் போது பின்பற்றப்பட்ட வேண்டிய நடைமுறை தொடர்பாக செயல்நடவடிக்கை திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) வ/ப பதுளை மாவட்ட சனச சங்கத்தில் 2001 மே 23 ஆந் திகதி ஆரம்பிக்கப்பட்ட 856 ஆம் இலக்க கணக்கில் 2017 திசெம்பர் 31 ஆந் திகதி

வரையில் ரூபா 1,235,354 தொகையும் 2016 ஒக்தோபர் 17 ஆந் திகதி ஆரம்பிக்கப்பட்ட 1466 ஆம் இலக்க கணக்கில் 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் ரூபா 263,348 தொகையும் செயற்பாடற்ற மீதியாக காணப்பட்டதுடன் அத்தொகை நிதியத்தின் பொதுக் கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டிருக்கவில்லை.

### 6.1.4 கூட்டுறவு அபிவிருத்தி நிதியம்

--------------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2011 திசெம்பர் 29 ஆந் திகதி வ/ப ஹாலிகல பலநோக்கு சேவை கூட்டுறவுச் சங்கத்திற்கு ரூபா 2,000,000 தொகை வழங்கப்பட்டிருந்த போதிலும் எவ்வித தவணையொன்றும் அறவிடப்படாதிருந்ததுடன் முகாமைத்துவத்தினால் கடன் அறவிடுவதற்கு முறையான நடைமுறையொன்று எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) கூட்டுறவு அபிவிருத்தி நிதியத்தின் பெறுமதியின் பிரகாரம் நிரந்தரமாக கிடைக்கும் நிதியங்களுக்கு மேலதிகமாக கூட்டுறவு வர்த்தக கண்காட்சி, லொத்தர், களியாட்டங்கள் போன்றவற்றை ஒழுங்குபடுத்துவதன் மூலம் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நன்கொடை ஊடாக நிதியத்தை மேம்படுத்துவதற்காக நிர்வாக சபை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பதிவு செய்யப்பட்ட சங்கங்கள் 1434 ஆக இருந்த போதிலும் அதில் 673 செயற்பாட்டு நிலைமையில் காணப்படவில்லை.

(ஈ) 2011 இன் 03 ஊவா மாகாண கூட்டுறவு நிதியதிச் சட்டத்திற்குரிய விதிக் கோவையின் 43(ii) விதி ஏற்பாடுகளின் பிரகாரம் மற்றும் உறுப்புரையின் 04 ஆம் பிரிவின் பிரகாரம் நிதியத்திற்கு கிடைக்க வேண்டிய ரூபா 88,523,647 ஆன நிலுவை பங்களிப்பு தொகை மீதியொன்று 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரை பதிவு செய்யப்பட 1434 சங்கங்களில் 1354 சங்கங்களின் மீளாய்வாண்டிற்குரிய பங்களிப்பு தொகையை செலுத்தியிருக்கவில்லை.

### 6.5.1 ஊவா மாகாண பயணிகள் போக்குவரத்து சேவைகள் அதிகாரசபை

---

**(அ) கணக்கீட்டு கொள்கைகள்**

---

செலவினம் அட்டுறு அடிப்படையில் கணக்கீடு செய்யப்பட்டு வருமானம் காசு அடிப்படையில் நிதிக்கூற்றுக்களில் இனங்காணப்பட்டிருந்தன. அதன் பிரகாரம் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது 2 கணக்கீட்டுக் கொள்கைகள் பயன்படுத்தப்பட்டிருந்தன.

**(ஆ) முகாமைத்துவ செயற்திறனின்மை**

---

ஊவா மாகாணத்திற்குள் பயணிகள் போக்குவரத்து சேவைகளையும், ஊவா மாகாணத்திற்கு பொருந்தும் வகையில் ஊவா மாகாணம் மற்றும் தொடர்புடைய மாகாணங்களுக்கு இடையே பயணிகள் போக்குவரத்து சேவைகளையும் முறைப்படுத்துதல் மற்றும் அச்செயற்பாடுடன் இணைந்த நோக்கத்தை நிறைவேற்றுவதை நோக்கில் ஊவா மாகாணத்திற்கு பயணிகள் போக்குவரத்து சேவை அதிகாரசபையை தாபிப்பதற்காக ஊவா மாகாண சபையின் 2001 இன் 01 ஆம் இலக்க பயணிகள் போக்குவரத்து சேவை நியதிச் சட்டத்திற்கான பிரமாணங்கள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**(இ) செயற்பாட்டு வினைத்திறனின்மை**

---

போக்குவரத்து அதிகாரசபை மூலம் புதிய வீதி வழங்குவதற்காக முறையான செயற்பாட்டு நடைமுறையொன்று ஸ்தாபிக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஈ) வருமான நிர்வாகம்**

---

2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 1146 பேருந்துகளுக்காக வீதி அனுமதிப்பத்திரங்களை வழங்கப்பட்டிருந்ததுடன் அதில் 446 பேருந்துகள் அளவில் ஓட்டத்தில் ஈடுபடுத்தப்படவில்லையென அவதானிக்கப்பட்டது. பேருந்துகளின் அனுமதிப்பத்திரங்களை புதுப்பித்தல், மாதந்த சம்பவப் புத்தகங்கள் வருமானம், சாரதி நடாத்துனர் அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் என்பன நாளதுவரையாக்கப்பட்டு வருமானம் மற்றும் நிலுவை வருமானம் என்பவற்றை இனங்காணக்கூடிய வகையில் வருமான பதிவேடுகள் பேணப்பட்டிருக்கவில்லை.

**6.1.6 ஊவா மாகாண வீடமைப்பு அபிவிருத்தி சுழற்சி நிதியம்**

-----------------------------------------------------------------------------------------

2010 இன் 06 ஆம் இலக்க ஊவா மாகாண வீடமைப்பு அபிவிருத்தி நியதிச் சட்டத்தில் காணப்படும் 12 செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்காக முகாமைத்துவம் தவறியிருந்தது.

**6.2 வர்த்தக முற்பணக் கணக்குகள்**

-------------------------------------------------

**மாகாண இயந்திர பணிப்பாளர் அலுவலகத்திற்கான முற்பணக் கணக்கு - விடய இலக்கம் 72602**

-----------------------------------------------------------------------------------------------------------------------------------

**(அ) முற்பணக் கணக்கு எல்லைகள் பின்பற்றப்படாமை**

-----------------------------------------------------------------------------------------

2017 வருடாந்த மதிப்பீட்டின் பிரகாரம் முற்பணக் கணக்கின் ஆகக்கூடிய வரவு எல்லை ரூபா 37,000,000 ஆக இருந்த போதிலும், திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு முற்பணக் கணக்கின் பிரகாரம் கடன்பட்டோர் ரூபா 52,516,923 ஆக இருந்தமையால் ஆகக்கூடிய வரவு எல்லை ரூபா 15,516,923 ஆல் விஞ்சியிருந்தது.

(ஆ) கணக்கீட்டு குறைபாடுகள்

-----------------------------------------

நிலையான சொத்துக்கள் மீள்மதிப்பீட்டின் போது வாகனங்கள், இயந்திரங்கள் பொருத்திகள் மற்றும் 7 ஆயுத உருப்படிகளின் புத்தக பெறுமதியை விட குறைந்த மீள்மதிப்பீட்டு பெறுமதிகளின் கூட்டுத்தொகை ரூபா 6,071,839 ஆன சொத்துக் கணக்குகள் செலவு வைக்கப்பட்டு மீள்மதிப்பீட்டுக் கணக்கிற்கு வரவு வைக்கப்பட வேண்டிய போதிலும், வாகனங்கள், இயந்திரங்கள் பொருத்திகள் மற்றும் ஆயுதங்கள் கைதவிர்ப்பு கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டிருந்தது. மீள்மதிப்பீடு செய்யப்பட்ட சொத்துக்களுக்குரிய பெறுமானத்தேய்வுப் பெறுமதியான ரூபா 7,020,894 மீள்மதிப்பீட்டுக் கணக்கிற்கு செலவு வைப்பதற்குப் பதிலாக கைதவிர்ப்புக் கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டமையால் மீளாய்வாண்டின் மிகை ரூபா 949,055 ஆல் கூடுதலாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

**(இ) சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத் தீர்மானங்களுடன் இணங்காமை**

| சட்டங்கள், விதிகள் பிரமாணங்களுடனான தொடர்பு | பெறுமதி | இணங்காமை |
|---|---|---|
| | ரூபா | |
| ஊவா மாகாண நிதி விதிக்கோவை | | |
| நி.பி 504.1 | - | 2017 ஆம் ஆண்டின் ஒவ்வொரு காலாண்டிற்காக வியாபாரக் கடன்பட்டோர், வியாபாரக் கடன் கொடுத்தோர் மற்றும் முற்பண கணக்கிற்காக உரிய கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டு கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு பிரதியொன்றுடன் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| நி.பி 507.2.4 | 99,560,108 | மெய்மையாய்வின் பின்னர் கண்டறியப்பட்ட இருப்புக்கள் மற்றும் நிலையான சொத்துக்களின் பெறுமதியின் பொருண்மையான விலகல் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தரால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| நி.பி 509.1 | 10,711,600 | 2017 ஆம் ஆண்டின் நிலையான சொத்துக்கள் மாகாண திறைசேரியின் புத்தகங்களை தீர்ப்பதற்கு முன்னர் பெறுமானத் தேய்வு ஒதுக்க நிதியத்திற்கு செலவு வைக்கும் பொருட்டு மாகாண திறைசேரிக்கு அனுப்பி வைக்கப்பட்டிருக்கவில்லை. |

**(ஈ) முகாமைத்துவ செயற்திறனின்மை**

---

(i) 2008 ஆம் ஆண்டு முதல் 2016 திசெம்பர் 31 ஆந் திகதி வரையான காலப்பகுதியில் சேவைகள் வழங்கியமைக்காக அறவிடப்பட வேண்டிய ரூபா 52,516,432 ஆன மீதியில் 2018 மே 23 ஆந் திகதி வரையிலும் ரூபா 30,243,811 மேலும் அறவிடப்பட வேண்டியிருந்தது.

(ii) இருப்பு புத்தகத்தின் 42 ஆம் பக்கத்தில் பதிவு செய்யப்பட்டிருந்த ரூபா 16,000 பெறுமதியான 185x14 அளவிலான இரண்டு டயர்கள் காணாமல் போயிருந்ததுடன் இது தொடர்பாக பரீட்சிக்கப்பட்டு பொறுப்பு வாய்ந்த தரப்பினர் இனங்காண்பதற்கு நட்டத்தை தீர்ப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) 2013 ஆம் ஆண்டின் போது ரூபா 4,540,052 செலவிடப்பட்டு நிர்மாணிக்கப்பட்ட மொனறாகலை மட்டத்தில் அமைந்துள்ள நக்கல சேவை நிலையம் வாகன சேவை நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தாமல் விளைவற்றுக் காணப்பட்டதுடன் மீளாய்வாண்டின் போது சேவை நிலையத்திற்காக செலவிடப்பட்ட மொத்த செலவினம் ரூபா 970,943 ஆக இருந்தது.

**6.2.2 மாகாண இயந்திர பணிப்பாளர் அலுவலகத்திற்கான முற்பணக் கணக்கு விடய இலக்கம் 72602**

---

**(அ) நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்**

---

(i) ஊவா மாகாண நிதி விதி 504.1 இன் பிரகாரம் ஒவ்வொரு ஆண்டின் இறுதியில் முற்பணக் கணக்கு நடவடிக்கைகளுக்குரிய தயாரிக்கப்பட வேண்டிய வியாபாரக் கடன் கொடுத்தோர் தொடர்பான கூற்று மற்றும் மூலப்பொருள் களஞ்சியப் பொருள் மற்றும் வழங்கல் தொடர்பான கூற்று தயாரிக்கப்பட்டு அக்கலாண்டின் பின்னர் வரும் மாதத்தின் 15 ஆந் திகதிக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு பிரதியொன்றுடன் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) ஊவா மாகாணத்தின் நிதி 504.2 இன் ஒவ்வொரு ஆண்டு இறுதியிலும் சந்தர்ப்பத்திற்கு ஏற்ற வகையில் இலாப நட்டக் கணக்கொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) ஊவா மாகாண நிதி வீதி 501.3 இன் வர்த்தக முற்பணக் கணக்கு தொடர்பாக 04 வரையறைகள் குறிப்பிடப்பட வேண்டிய போதிலும் ஊவா மாகாணத்தின் அச்சிட்டு முற்பணக் கணக்கின் பெறுப்புக்களின் உயர் எல்லை குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) கணக்கீட்டுக் குறைபாடுகள்**

-------------------------------------------

(i) அச்சகம் அமைந்துள்ள காணியின் பெறுமதி மதிப்பிடப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ii) அச்சகத்திற்காக நிர்மாணிக்கப்பட்ட கட்டிடத்தின் மொத்த வேலைப் பெறுமதி இனங்காணப்படாமல் ரூபா 11,893,914 மாத்திரம் சொத்தாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

**(இ) சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத் தீர்மானங்களுடன் இணங்காமை**

------------------------------------------------------------------------------------------------------------------------------------

| சட்டங்கள், விதிகள் பிரமாணங்களு டனான தொடர்பு | பெறுமதி | இணங்காமை |
|---|---|---|
| ------------------------------------------------------ | ----------------- | ------------------- |
| ஊவா மாகாண நிதி விதிக்கோவை | | |
| ------------------------------------------------------ | | |
| நி.வி 156(5) | - | கணக்குகளிலும் அது தொடர்பான ஆவணங்களிலும் அழித்தல்கள் இடம்பெற்றிருந்த போதிலும் சரி செய்வதற்காக பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர்கள் சிற்றொப்பம் இடம்பெற்றிருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| நி.வி 505 | - | முற்பணக் கணக்கு நடவடிக்கைகள் தொடர்பாக மாதாந்த சோதனை பரிசோதனை மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை |
| நி.பி 509.1 | 378,455 | முற்பண கணக்கு நடவடிக்கை களுக்குரிய சொத்துக்கள் பெறுமானத்தேய்வு செய்யப்பட்டு மாகாண திறைசேரியின் கணக்கு தீர்ப்பனவின் பொருட்டு பெறுமானத் தேய்வு ஒதுக்கீடு கணக்கிற்கு செலவு வைக்கும் பொருட்டு மாகாண திறைசேரிக்கு அனுப்பி வைக்கப்பட்டிருக்க வில்லை. |

**(ஈ) இணக்கமிண்மைகள்**

------------------------------

நிதி திலைமைக் கூற்று மற்றும் காசுப் பாய்ச்சல் கூற்று பிரகாரம் 2017 திசெம்பர் 31 ஆந் திகதி முடிவடைந்த ஆண்டிற்காக காசு மற்றும் காசுக்கு சமமானவற்றின் பெறுமதி ரூபா 7,670,753 ஆக இருந்த போதிலும் காசேடு மற்றும் சேமிப்பு கணக்கில் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 4,529,854 ஆக இருந்தமையால் ரூபா 3,140,899 ஆன வேறுபாடொன்று காணப்பட்டது.

**(உ) முகாமைத்துவ செயற்திறனின்மை**

----------------------------------------------------

(i) நீண்டகால அறவிடப்படாமல் காணப்படும் ரூபா 274,016 தொகையான 11 கடன்பட்டோர் மீதிகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) காசு மற்றும் காசோலை பெறுவனவுகள் நடைமுறைக் கணக்கிற்கு வைப்புச் செய்யப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டின் ஒக்தோபர் மாதம் முதல் திசெம்பர் வரையான பெறுவனவுகள் ரூபா 3,947,508 தொகை சேமிப்பு கணக்கில் வைப்புச் செய்யப்பட்டு நடைமுறைக் கணக்கிற்கு மாற்றப்பட்டிருந்தது.

**(ஊ) பதவியணியினர் நிர்வாகம்**

-------------------------------------------

மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் தேவையான பதவியணியினர் தீர்மானிக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை.

**6.2.3 விடய இலக்கம் 71502 - பொறலந்த விலங்குப் பண்ணையின் வணிக முற்பணக் கணக்கு**

------------------------------------------------------------------------------------------------------------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

**(அ) இருப்பு மதிப்பீடு**

---------------------------

பண்ணையின் இறுதி உயிர்வாழ் இருப்புக்களை மதிப்பிடும் போது கால்நடைகளின் உயிருடன் கூடிய நிறையின் பிரகாரம் பெறுமதியிடுவதாக வெளிப்படுத்தப்பட்டிருந்த போதிலும் ஆண்டின் போது கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களத்தினால் வழங்கப்பட்டிருந்த இறக்குமதி செய்யப்பட்ட 100 கால்நடைகளின் இறக்குமதி கிரயம் ரூபா 48,000,000 தொகை இருப்பு பெறுமதியாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

**(ஆ) சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத் தீர்மானங்களுடன் இணங்காமை**

--------------------------------------------------------------------------------------------------------------------------------

மாகாண நி.வி 509.1 இன் பிரகாரம் சொத்துக்கள் பெறுமானத்தேய்வு செய்யப்பட்டு அதற்குரிய ரூபா 1,978,569 தொகை பெறுமானத்தேய்வு ஒதுக்கமாக மாகாண திறைசேரியின் "பொது வைப்புக் கணக்கு - பெறுமானத்தேய்வு ஒதுக்க நிதியக் கணக்கிற்கு செலவு வைக்கும் பொருட்டு மாகாண திறைசேரிக்கு அனுப்பி வைக்கப்பட்டிருக்கவில்லை.

**(இ) நிதி மீளாய்வு**

---------------------

**வரையறைகளை பின்பற்றாமை**

-----------------------------------------------

2017 ஆம் ஆண்டின் வருடாந்த மதிப்பீட்டின் பிரகாரம் பொறுப்புக்களின் உயர் வேலை அங்கீகரிக்கப்படாதிருக்கையில் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 1,018,758 ஆன பொறுப்புக்கள் உருவாக்கப்பட்டிருந்தது.

**(ஈ) அதிகாரமளிக்கப்படாத தொழிற்பாடு நட்டம்**

2015 ஆம் ஆண்டின் முற்பணக் கணக்கில் ரூபா 10,571,904 ஆன தொழிற்பாட்டு நட்டமொன்று இடம்பெற்றிருந்ததுடன் மாகாண நிதி விதி 512.2 இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்து நிதி ஏற்பாடு ஒதுக்கீடு செய்யப்பட்டு நட்டம் பதிவழிக்கப்பட்டிருக்கவில்லை. அத்தொழிற்பாட்டு நட்டம் திரண்ட இலாபத்திற்கு வரவு வைக்கப்பட்டு அதிகாரமளிக்கப்படாத தொழிற்பாட்டு நட்டம் நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**(உ) செயற்பாட்டு வினைத்திறனின்மை**

(i) மீளாய்வாண்டிற்கான முற்பணக் கணக்கின் நட்டம் ரூபா 3,615,345 ஆக இருந்ததுடன் அது முன்னைய ஆண்டின் இலாபமான ரூபா 2,402,937 உடன் ஒப்பிடும் போது ரூபா 6,018,282 ஆன வீழ்ச்சியென்றாக இருந்தது. மீளாய்வாண்டில் கருதுகோள் கட்டணம் சீராக்கப்பட்டதன் பின்னர் தேறிய இலாபம் ரூபா 12,184,447 ஆக இருந்தது.

(ii) பொரலந்த விலங்குப் பண்ணைக்கு 2017 திசெம்பர் மாதத்தின் போது அவுஸ்திரேலியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட உயர் தரத்திலான 100 பசுக்களுக்காக மாட்டுத் தொழுவமொன்றை அமைப்பதற்காக 2017 நவம்பர் 06 ஆந் திகதி உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்ததுடன் மாட்டுத் தொழுவ நிர்மாணம் 2018 பெப்ரவரி 03 ஆந் திகதி பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்தது. எனினும், 2018 மார்ச் 23 ஆந் திகதி வரையிலும் உரிய நிர்மாணம் பூர்த்தி செய்யப்படாதிருந்ததுடன் பசுக்கள் சுகாதார பாதுகாப்பற்ற விதத்தில் வைக்கப்பட்டிருந்தன.

(iii) 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 5,977,306 ஆன நிதி மிகையொன்று சேமிப்புக் கணக்கொன்றில் நிறுத்திவைக்கப்பட்டிருந்தது.

## 7. செயற்பாட்டு மீளாய்வு

### 7.1 செயலாற்றல்

### 7.1.1 அரசாங்க மானியம்

மாகாண சபை அபிவிருத்தி வேலைத் திட்டங்களுக்காக கிடைத்த நிதிஏற்பாடு மற்றும் அவற்றைப் பயன்படுத்துதல் தொடர்பான விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| நிதிய மூலம் | தேறிய நிதிஏற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | சேமிப்பு சதவீதமாக |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | |
| திட்டவட்டமான அடிப்படையிலான மானியங்கள் | **616,336,640** | 494,934,406 | 121,402,234 | 20 |
| மாகாண குறித்துரைக்கப்பட்ட அபிவிருத்தி மானியம் | 3,380,174,540 | 2,415,804,380 | 964,370,161 | 28 |
| உலக வங்கியின் உதவிகள் | 411,417,635 | 476,084,323 | 235,333,313 | 33 |
| யுனிசெப் | 4,027,632 | 4,027,001 | 631 | 01 |
| மொத்தம் | 3,841,075,000 | 2,861,213,933 | 979,861,067 | |

### 7.1.2 மாகாண அபிவிருத்தித் திட்டம்

மீளாய்வாண்டிற்கான மாகாண அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் புதிய வேலை மற்றும் தொடர் வேலைகளுக்காக ரூபா 2186.6 மில்லியன் மதிப்பீட்டுப் பெறுமதிக்குரிய 3076 செயற்திட்ட முன்மொழிவுகள் அங்கீகரிக்கப்பட்டிருந்தன. மாகாண சபையின் செயன்முன்னேற்ற அறிக்கையின் பிரகாரம் செயற்திட்ட வேலை முன்மொழிவுகளின் செயன்முன்னேற்றம் கீழே காட்டப்பட்டுள்ளது.

| செயற்திட்ட விபரம் | புதிய வேலை | தொடர்ச்சியான வேலை | மொத்த வேலைத் திட்டங்கள் |
|---|---|---|---|
| முழுமையாகப் பூர்த்தி செய்யப்பட்ட | 2746 | 78 | 2824 |
| 50% இற்கு மேல் பூர்த்தி செய்யப்பட்ட | 162 | 25 | 187 |
| 50% இற்கு குறைவாக பூர்த்தி | 17 | 03 | 20 |

| | | | |
|---|---|---|---|
| செய்யப்பட்ட | | | |
| ஆரம்பிக்கப்படாத | 36 | - | 36 |
| மந்தமான / பிரச்சினைக்குரிய நிலைக்குட்பட்ட | 08 | 01 | 09 |
| | ------- | ------- | ------- |
| மொத்தம் | 2969 | 107 | 3076 |
| | ==== | ==== | ==== |

### 7.1.3 நிலைபேறான அபிவிருத்தி இலக்கு நோக்கங்களை அடைந்து கொள்ளல்

(அ) நிலைபேறான அபிவிருத்தி தொடர்பான ஐக்கிய நாடுகளின் ஆண்டு 2030 "நிகழ்ச்சி நிரல்" இன் பிரகாரம் சகல நிறுவனங்களும் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். மீளாய்வாண்டிற்குரித்தாக ஊவா மாகாண சபையினால் தமது விடயப் பரப்பிற்கு எடுக்கப்படும் பணிகள் தொடர்பாக எவ்வாறு செயற்பட வேண்டுமென்பது தொடர்பாக அறிந்திருந்த போதிலும் தமது செயற்பாடுகள் தொடர்பாக நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் மற்றும் இலக்குகள் அந்த இலக்குகளை நோக்கி அடையப்பட வேண்டிய அளவீடுகளும் இலக்குகளை நோக்கி அடைவதற்கான குறிகாட்டிகளும் இனங்காணப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைந்து கொள்வதற்காக 2016, 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளின் போது கிடைத்த நிதி ஏற்பாடுகளின் பெறுமதி மற்றும் உள்ளவாறான செலவினம் என்பன இனங்காணப்பட்டிருக்கவில்லை.

(இ) நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைந்து கொள்வதற்காக தயார்படுத்தும் போது ஏனைய நிறுவனங்களுடன் கூட்டிணைப்பினை கொண்டிராமை காரணமாக இலக்கிடப்பட்ட நோக்கங்களை அடைந்து கொள்வதற்கு திட்டங்களைத் தயாரித்தல் மற்றும் முன்தயார்படுத்தல் செயற்பாடு மிகவும் மந்த கெதியான நிலைமையில் காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது.

### 7.1.4 ஏனைய அவதானிப்புக்கள்

-------------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) ப/சுஜாதா மஹா வித்தியாலத்தினால் 2017 ஆம் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்டிருந்த வருடாந்த செயல்நடவடிக்கை திட்டத்தில் காணப்பட்ட 12 செயற்பாடுகள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ப/சுஜாதா மஹா வித்தியாலத்தின் 2014 ஆம் ஆண்டிற்கு ஒப்பாக 2016 ஆம் ஆண்டின் போது ஆங்கில பாடம் சித்தியடைதல் சதவீதம் 6 சதவீதத்தினாலும் கணித பாடம் சித்தியடைதல் சதவீதம் 7 சதவீதத்தினாலும் வீழ்ச்சியடைந்திருந்தன.

(இ) பா/ சங்கபோதி வித்தியாலயத்தின் 2017 ஆம் ஆண்டிற்கான செயல்நடவடிக்கை திட்டத்தில் காண்பிக்கப்பட்ட பாடசாலையால் நிறைவேற்றப்பட வேண்டிய 08 நோக்கங்களில் 05 நோக்கங்கள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

(ஈ) பா/ சங்கபோதி வித்தியாலயத்தின் 2012 ஆம் ஆண்டு முதல் 2016 ஆம் ஆண்டு வரை க.பொ.த (சாதாரண) பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களின் ஆங்கில பாடம் சித்தியடைதல் சதவீதம் 10 சதவீதம் முதல் 26 சதவீதம் வரையான வீச்சிலும் கணித பாடம் சித்தியடைதல் சதவீதம் 33 சதவீதத்திலிருந்து 62 சதவீதம் வரையான வீச்சில் காணப்பட்டது.

(உ) ஊவா மாகாண சபையின் வருடாந்த மதிப்பிட்டின் பிரகாரம் காணி ஆணையாளர் திணைக்களத்திற்குரிய பிரதான செயற்பணியான காணி அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தின் கீழ் குடியிருப்பு முன்மொழிவுகளை திட்டமிடல், செயற்படுத்துதல் மற்றும் குடியிருப்பு துறைகளின் கட்டமைப்பு வசதிகளை வழங்குதல் மற்றும் அபிவிருத்தி செய்தல் போன்ற செயற்பாடுகள் திணைக்களத்தின் செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளக்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) காணி ஆணையாளர் திணைக்களத்தின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தயாரிக்கப்பட்ட செயன்முன்னேற்ற அறிக்கையின் பிரகாரம் ஆண்டில் செயற்படுத்தப்பட்டிருந்த நீர் வன பாதுகாப்பு செயற்திட்டங்கள், சுற்றாடல் பாதுகாப்பு செயற்திட்டங்கள் தொடர்பாக அறிவூட்டும் நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் நீரேந்துப் பிரதேசங்களில் மரங்கள் வளர்ப்பு நிகழ்ச்சித்திட்டமொன்று வருடாந்த செயல்நடவடிக்கை திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(எ) காணி ஆணையாளர் திணைக்களத்தினால் ஊவா மாகாணத்தின் பிரதேச செயலகங்களின் செயற்பாடும் கணனி மயப்படுத்தப்பட்ட தரவு முறைமை நாளது வரையாக்கப்பட்டிருக்கவில்லை.

(ஏ) நிதி ஆணைக்குழுவின் 2015 திசெம்பர் 30 ஆந் திகதி 2016/01 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் திட்டவட்டமான அபிவிருத்தி மானியங்கள் கீழே காட்டப்பட்டுள்ள நியதியின் கீழ் மட்டுப்படுத்தப்பட்டிருந்தன.

| நியதிகள் | நிறைவேற்றப்பட வேண்டிய சதவீதம் |
|---|---|
| பொருளாதார உட்கட்டமைப்பு வசதிகள் | 30 |
| சமூக உட்கட்டமைப்பு வசதிகள் | 30 |
| சுய தொழில் மேம்பாடு | 20 |
| நீர்ப்பாசனம் மற்றும் விவசாயம் | 10 |
| சமய கலாசார மற்றும் கலை அலுவல்கள் | 10 |

பண்டாரவலை பிரதேச செயலகத்தினால் 2017 ஆம் ஆண்டில் செயற்படுத்தப்பட்ட செயற்திட்டத்தின் அளவு அங்கீகரிக்கப்பட்ட மொத்த செயற்திட்டங்களின் எண்ணிக்கை எந்தளவு சதவீதம் என்பது தொடர்பாக அறிக்கை பேணப்பட்டிருக்கவில்லை. அந்த நியதியின் கீழ் பிரதேச செயலக பிரிவில் நலன்கள் பொருளாதார பங்களிப்பு அறிக்கையிடப்படாதிருந்ததுடன் பிரதேச செயலகத்தினால் செயற்திட்டங்கள் தொடர்பாக பின்தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஐ) திட்டவட்டமான அடிப்படை அபிவிருத்தி செயற்திட்டங்களை செயற்படுத்தும் முகவர் நிறுவனமொன்றான ஊவா மாகாணத்தின் பிரதேச செயலகங்களுக்கு இடையே ஹல்துமுல்ல, மஹியங்கன, புத்தள, மொனராகலை, மற்றும் பண்டாரவலை பிரதேச செயலகங்களின் செயற்திட்டங்களை செயற்படுத்துவது தொடர்பாக தெரிவு பரிசோதனையின் போது பின்வரும் பொது குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(i) பெறுகை திட்டம் மற்றும் பெறுகை கால அட்டவணை தயாரிக்காமை.

(ii) முறையான பெறுகை வழிகாட்டி பின்பற்றப்படாமை.

(iii) எதிர்பார்க்கப்பட்ட காலப்பகுதியொன்றின் பிரகாரம் செயற்திட்டங்களை செயற்படுத்தப்படாமை.

(iv) வெவ்வேறு நலன்களின் கீழ் ஒரே நலனாலிக்கே மீண்டும் மீண்டும் நலன்கள் கிடைப்பதை தவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்காமை.

(v) போதியளவு பின்தொடர் நடவடிக்கை எடுக்கப்படாமை.

(vi) பொருட்கள் மற்றும் உபகரணங்கள் பொறுப்பேற்றல் விநியோகம், களஞ்சியக் கட்டுப்பாட்டிலிருந்து விலகி செயற்படல்

(vii) விநியோக ஆவணங்களின் பொருட்களின் தொடர் இலக்கம், மாதிரி, உற்பத்தி வியாபார பெயர் குறிப்பிடாமை

(viii) உபகரணங்களுக்காக உத்தரவுச் சான்றிதழ் பெற்றுக்கொள்ளப்படாமை

(ix) மாதிரிப் பட்டியல்களில் போதியளவு விபரங்கள் உள்ளடக்கப்படாமை.

(x) சுயதொழில் உதவிகள் குறைப் பயன்பாட்டிற்கு உட்பட்டிருந்தமை.

(ஒ) 2015 திசெம்பர் 30 ஆந் திகதிய 2016/31 ஆம் இலக்க நிதி ஆணைக்குழு சுற்றறிக்கைக்கு முரணாக 2 திட்டவட்டமானவற்றின் கீழ் செலவிட கூடிய உயர் எல்லையை விஞ்சி பிரதி பிரதம செயலாளரால் (திட்டமிடல்) சேவை 2016 ஆம் ஆண்டின் போது ரூபா 169,744,529 திட்டவட்டமான மானியம் செலவிடப்பட்டடிருந்தது.

(ஓ) திட்டவட்டமான மானியங்களின் கீழ் சமூக உட்கட்டமைப்பிற்காக வீடுகளைக் நிர்மாணிப்பதற்கு விநியோகிக்கும் பொருள் உதவிகள் அச் செயற்பாட்டிற்கே பயன்படுத்தியதை உறுதிப்படுத்தும் பின்தொடர் நடவடிக்கை செயற்படுத்தப்படாதிருந்ததுடன் உரிய செயற்பாட்டிற்காக பயன்படுத்தாத 5 சந்தர்ப்பங்கள் மஹியங்கனை மற்றும் பசறை பிரதேச செயலகங்களுக்கு தொடர்பாக மேற்கொண்ட பரிசோதனைகளின் போது கண்டறியப்பட்டன. செவனகல பிரதேச செயலக பிரிவின் முன் பள்ளிகளுக்காக பகிர்ந்தளிப்பதற்காக 2016 ஒக்தோபர் 12 ஆந் திகதி ரூபா 197,250 இற்கு கொள்வனவு செய்யப்பட்ட 25 நீர் வடிகட்கள் 2017 ஆகஸ்ட் 28 ஆந் திகதி வரையிலும் களஞ்சியத்தில் வைத்திருக்கப்பட்டிருந்தன. சுயதொழில் மேம்பாட்டிற்காக திட்டவட்டமான நிதி ஏற்பாடுகளின் கீழ் ஊவா மாகாண சபையால் ரூபா 19,913,408 செலவிடப்பட்டிருந்ததுடன் நலனாலிகள் சுயதொழில் ஈடுபடுவதை பின்தொடர் நடவடிக்கை மூலம் உறுதிப்படுத்தியிருக்கவில்லை.

(ஔ) 2017 ஆம் ஆண்டிற்காக ஊவா மாகாண சபையின் பதவியணியின் பயிற்சி தேவைப்பாடுகள் இனங்காணப்பட்டு பயிற்சி திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(க) பிரதிப் பிரதம செயலாளர் (ஆளணி மற்றும் பயிற்சி) அலுவலகத்திற்காக 1409 ஆம் விடய இலக்கத்தின் கீழ் பயிற்சி மற்றும் அபிவிருத்திற்காக 2017 ஆம் ஆண்டில் ரூபா 8,500,000 நிதி ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தது. அந்நிதி ஏற்பாட்டில் 2017 ஒக்தோபர் 31 ஆந் திகதி வரையில் ரூபா 7,882,094 செலவிடப்பட்டிருந்ததுடன் அதில் ஊவா முகாமைத்துவ அபிவிருத்தி மற்றும் பயிற்சி நிறுவகத்தை நடாத்திச் செல்வதற்காக ரூபா 5,244,912 தொகை செலவிடப்பட்டிருந்தது. பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துவதற்காக செலவிடப்பட்ட தொகை ரூபா 2,637,132 ஆக இருந்தது. அது மதிப்பிடப்பட்ட நிதி ஏற்பாட்டின் 31 சதவீதமாக இருந்தது.

(கா) மொனராகலை பிரதி விவசாயப் பணிப்பாளர் அலுவலகத்தின் மூலம் வெவ்வேறு நிகழ்ச்சிகளின் கீழ் பகிர்ந்தளிக்கப்பட்ட விதைகள், நாற்றுக்கள் மற்றும் உபகரணங்கள் உரிய நிகழ்ச்சித்திட்டங்களிலிருந்து நோக்கத்தை நிறைவேற்றும் வகையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதா என்பது தொடர்பாக பின்தொடர் நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன் நலனாலிகளுக்கு இலவசமாக மற்றும் 50 சதவீத பங்களிப்பின் கீழ் வழங்கப்படும் பொருட்கள், உபகரணங்கள் மற்றும் நாற்றுக்கள் எதிர்பார்க்கப்பட்ட காலப்பகுதியில் கிடைக்காமையால் அதன் மூலம் எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்கள் நிறைவேற்றும் இயலுமை பலவீனமாக இருந்தது.

(கி) போசணைக் குறைபாடுள்ள பிள்ளைகளின் போசணை நிலைமையை உயர்த்துவதற்காக சாதரண உணவு வேலையிலிருந்து பெற்றுக்கொள்வதற்கு சிரமமான போசணை தேவைகளை பூர்த்தி செய்வது திரிபோஷா வழங்குவதன் அடிப்படை நோக்கமாக இருந்ததுடன் சுகாதார, போசாக்கு மற்றும் சுதேச மருத்துவ அமைச்சின் 01-07/2016 ஆம் இலக்க 2016 சனவரி 19 ஆந் திகதிய சுற்றறிக்கையின் பிரகாரம் நலனாலியொருவருக்கு நாளாந்தம் 50 கிராம் வீதம் மாதாந்தம் 1500 கிராம் (2 பகட்) வழங்கப்பட வேண்டிய போதிலும் சியம்பலான்டுவ கொவிதுபுர குடும்ப சுகாதார சேவை பிரிவில் 2017 ஆம் ஆண்டினுள் 8 மாதங்களுக்கு மாத்திரம் திரிபோஷா வழங்கப்பட்டிருந்தது. நலனாலிகளுக்கு மாதாந்தம் திரிபோஷா வழங்கப்படாதிருந்தமையால் இந்நிகழ்ச்சித்திட்டத்தின் அடிப்படை நோக்கம் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

(கீ) சியம்பலான்டுவ சுகாதார மருத்துவ அதிகாரி அலுவலகத்தின் மூலம் 21 மகப்பேற்று நல சிகிச்சை நிலையங்கள் நடாத்தப்பட்டிருந்த போதிலும் அதற்காக பயன்படுத்தப்படும் Ferrous Sulfax மற்றும் Urging Strips என்பன உரிய திகதியில் கிடைந்திருக்கவில்லை. அதன் பிரகாரம் மகப்பேற்று நல சிகிச்சை நிலையம் நடாத்தப்படுவது ஆக்கபூர்வமாக இருக்கவில்லை.

(கு) மீளாய்வாண்டின் போது ஊவா மாகாண சுகாதார சேவைகள் திணைக்களத்தின் நாய் மலடாக்கல் நிகழ்ச்சித்திட்டத்திற்காக சுகாதார, போசாக்கு மற்றும் சுதேச மருத்துவ அமைச்சினால் 20482 நாய்களை மலடாக்குவதற்கு ரூபா 21,630,200 நிதி ஏற்பாடு ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் 7365 நாய்கள் மலடாக்கப்பட்டிருந்தமையால் நிகழ்ச்சித்திட்டத்திலிருந்து எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்கள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

(கூ) உள்ளூராட்சி திணைக்களத்தின் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் 321 செயற்பாடுகளுக்காக ரூபா 166,901,008 நிதி ஏற்பாடு ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன் அதில் 29 செயற்பாடுகளுக்கு ஒதுக்கப்பட்ட நிதி ஏற்பாடான ரூபா 21,076,000 தொகை பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை

## 7.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

-----------------------------------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) 2017 சனவரி மாதம் முதல் செப்தெம்பர் 30 ஆந் திகதி வரையான காலப்பகுதியில் சபை செயலகத்திற்கு டயர் கொள்வனவு செய்வதற்காக ரூபா 422,800 செய்யப்பட்டிருந்தது. டயருக்காக கூறுவிலை கோரும் போது தந்துரைகள் மிகவும் சுருக்கமாக குறிப்பிடப்பட்டிருந்ததுடன் டயர் உற்பத்தி ஆண்டு, சராசரியாக ஓட்டத்தில் ஈடுபடுத்த வேண்டிய தூரம், பாரம், இயலளவு போன்ற விடயங்கள் உள்ளடக்கிப்பட்டிருக்கவில்லை. புதிதாக டயர் கொள்வனவின் போது பழைய டயர்கள் ஓட்டத்தில் ஈடுபடுத்தப்பட்ட தூர அளவு உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மஹியங்கன பிரதேச செயலகத்திற்காக அங்கீகரிக்கப்பட்ட திட்டவட்டமான அடிப்படையிலான 167 அபிவிருத்தி செயற்திட்டங்களில் 21 மாத்திரம் 2017 நவம்பர் 10 ஆந் திகதி வரை பூர்த்தி செய்யப்பட்டிருந்தன. 146 செயற்திட்டங்களை பூர்த்தி செய்வதற்காக எஞ்சியிருந்த காலம் 01 மாதமும் 20 நாட்களுமாக இருந்தன.

(இ) உள்ளூராட்சி மன்றங்களின் கழிவு பொருட்கள் முகாமைத்துவத்தை மேம்படுத்துவதற்காக மொனராகலை மாவட்டத்தின் 8 உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 546,480 பெறுமதியான 1980 குப்பை வாளிகள் வீடுகளுக்கு பகிர்ந்தளிக்கப்படாமல் உள்ளூராட்சி மன்றங்களின் களஞ்சியத்தில் வைக்கப்பட்டிருந்தன.

(ஈ) ஊவா மாகாண இயந்திர பணிப்பாளர் அலுவலகத்திறகு சொந்தமான முழு அளவலான பதவியணியொன்றும் வசதிகளுடன் கூடிய வாகன திருத்த வேலை நிலையமொன்றும் காணப்படுகையில் மாகாண சுகாதார சேவைகள் திணைக்களத்திற்குச் சொந்தமான 05 வாகனங்கள் வெளிவாரி தனியார் நிறுவனங்களிடமிருந்து திருத்த வேலைகள் செய்து கொள்ளப்பட்டு ரூபா 2,239,210 தொகை செலவுசெய்யப்பட்டிருந்தது.

(உ) பதுளை பிரதேச சுகாதார சேவை பணிப்பாளர் அலுவலகத்தில் ரூபா 11,821,596 பெறுமதியான மெதுவான பாவனையுடன் கூடிய 48 மருந்து உருப்படிகள் இருந்ததுடன் மருந்து தேவைகள் உடைய வைத்தியசாலை இனங்காணப்பட்டு பகிர்ந்தளிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) தேமோதர பிரதேச வைத்தியசாலையில் 2017 செப்தெம்பர் மாதம் நள்ளிரவு அறிக்கையின் பிரகாரம் தங்கிச் சிகிச்சை பெறும் நோயாளிகள் இல்லாத சந்தர்ப்பங்களிலும் ஆறு நோயாளர்களுக்கு குறைந்த சந்தர்ப்பங்களிலும் இரண்டு தாதி உத்தியோகத்தர்கள் இல்லது அதற்கு கூடுதலாக சேவையில் ஈடுபட்டிருந்த 21 சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன. காலை மற்றும் மாலை வேலைகளுக்காக நோயாளிகளுக்கு ஒப்பாக தாதி உத்தியோகத்தர்கள் கூடுதலானோர் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

(எ) மருத்துவ முகாமைத்துவ செயற்பாட்டு கோவையின் 3.8 ஆம் பிரிவின் பிரகாரம் 20 பிரசவங்களுக்காக ஒரு குடும்ப சுகாதார சேவை ஊழியர் அங்கீகரிக்கப்பட்டிருந்த போதிலும், 2017 ஆம் ஆண்டின் போது இடம் பெற்றிருந்த 06 பிரசவங்களுக்காக 2017 பெப்ரவரி முதல் 2017 திசெம்பர் வரை இரண்டு குடும்ப சுகாதார சபை ஊழியர்களுக்காக ரூபா 559,090 ஆன மேலதிக நேரப் படிகள் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. வைத்தியசாலை வளவினுள் உத்தியோகப்பூர்வ விடுதிகள் காணப்பட்ட போதிலும் மேலதிக நேர வேலைக் கொடுப்பனவை குறைக்கும் நோக்கில் தாபன விதிக் கோவையின் VIII ஆம் அத்தியாயத்தின் 06 ஆம் பிரிவின் பிரகாரம் (On call) முறைமை பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஏ) ஊவா மாகாணத்தில் வசிக்கும் அநாதைகள், கைவிடப்பட்ட, வன்முறைக்கு உட்படுத்தப்பட்ட பிள்ளைகளின் ஆதரவு மற்றும் அபிவிருத்தியை நோக்கியதாக நடாத்தப்படும் நிறுவனங்களை பதிவு செய்தல், மேற்பார்வை செய்தல், நிர்வகித்தல் மற்றும் வழிநடாத்துவதற்காகவும் அதற்கு அன்மித்த விடயங்களுக்காகவும் ஏற்பாடுகளை செய்வதற்காக ஊவா மாகாண சபையின்

2013 இன் 01 ஆம் இலக்க சிறுவர் அபிவிருத்தி நியதிச் சட்டத்திற்காக நன்நடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு சேவைகள் திணைக்களத்தினால் விதிகள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஐ) பகல்நேர பராமரிப்பு நிலையங்களை பதிவு செய்து, கண்காணித்து மற்றும் உதவிகளை வழங்குதல் நன்நடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு சேவைகள் திணைக்களத்தின் பிரதான பணியாக இருந்த போதிலும் ஊவா மாகாண நன்நடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு சேவைகள் ஆணையாளரின் 2015 திசெம்பர் 28 ஆந் திகதிய ஊவா/நன்/அபி/02/02/10 ஆம் இலக்க கடிதத்தின் மூலம் பகல்நேர பராமரிப்பு நிலையங்களுக்காக திட்டவட்டமான பட்டயமொன்று இல்லையென்பதால் பராமரிப்பு உதவி கொடுப்பனவு செய்ய முடியாதென பகல்நேர பராமரிப்பு நிலையங்களுக்காக அறிவிக்கப்பட்டிருந்தது. 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் பராமரிப்பு உதவிகள் கொடுப்பனவு செய்வதற்கு பொருத்தமான நடைமுறையொன்றினை நன்நடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு சேவைகள் திணைக்களத்தினால் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஒ) 07 நன்நடத்தை உத்தியோகத்தர்களால் மாதாந்த கண்காணிப்பு அறிக்கை நன்நடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு சேவைகள் ஆணையாளருக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஓ) ஊவா மாகாண நன்நடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு சேவைகள் கதிர்காமம் நெனசரண சிறுவர் அபிவிருத்தி நிலையத்திற்கு ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட இரண்டு மேற்பார்வையாளர் உத்தியோகத்தர்களால் பிள்ளைகள் வல்லுறவுக்கு உட்படுத்தியமையால் பிள்ளைகளின் மனநிலை பாதிக்கப்பட்டடு கல்வி நடவடிக்கைகள் சீர் குலைந்து காணப்பட்டது.

(ஔ) சமூக சேவைகள் திணைக்களத்தினால் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 1,891,500 பெறுமதியான 215 உபகரணங்கள் உத்தரவாதக் காலம் கடந்திருந்த போதிலும் நலனாலிகள் இனங்காணப்பட்டு பகிர்ந்தளிக்கப்பட்டிருக்கவில்லை.

(க) ஹாலிஎல பிரதேச சபைக்குரிய கடிகமுவத்த கெவன அம்பலமவத்த பெயரிலான ¾ ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ள சனசமூக மண்டபக் கட்டிடம் மற்றும் காணி மாதமொன்றிற்கு ரூபா 500 வீதம் வாடகைக்கு 2010 சனவரி 11 ஆந் திகதி முதல் எதிர்வரும் 5 ஆண்டுகளுக்காக தனியார் தரப்பினருக்கு குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தது. குத்தகை ஒப்பந்தம் 2015 சனவரி 10 ஆந் திகதி முடிவடைந்திருந்த போதிலும் கட்டிடம் மற்றும் காணி சபைக்கு கையேற்கப்பட்டிருக்கவில்லை.

(க) 2017 ஆம் ஆண்டில் 01 இன் ப/ ஸ்ரீ சங்கபோதி வித்தியாலயத்தின் அதிபரின் மூன்று ஆசிரியர்கள், ஆய்வு கூட உதவியாளர் மற்றும் அலுவலக உதவியாளரின் விடுமுறை தினங்கள் விடுமுறை பதிவேட்டில் உள்ளடக்கப்படாத 30 சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டதுடன் இரண்டு ஆசிரியர்கள், ஒரு ஆய்வுகூட உதவியாளர் மற்றும் அலுவலக உதவியாளர் ஒருவர் 21 சந்தர்ப்பங்களில் விடுமுறை அங்கீகரித்துக் கொள்ளாமல் சேவைக்கு அறிக்கையிட்டிருக்கவில்லை.

(கா) தாபன விதிக்கோவையின் VIII ஆம் அத்தியாயத்தின் 10 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் வார இறுதி நாட்களிலும் அரச விடுமுறை தினங்களிலும் சேவை புரிவதற்காக உள்ளூராட்சி மன்ற திணைக்களத்தின் நிர்வாக உத்தியோகத்தருக்கு ரூபா 61,102 ஆன விடுமுறை தினக் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. நிறைவேற்றப்பட்ட வேலைக்காக செய்யப்பட்ட வேலை அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(கி) ப/கட்டுஹ ஸ்ரீ தம்மலங்கார வித்தியாயலத்தின் பாடசாலை அபிவிருத்தி சங்கத்தினால் 80x20 பாடசாலை உட்பட வேலையின் போது பெறுகை செயற்பாட்டிலிருந்து விலகி ரூபா 487,585 பெறுமதியான கட்டிடங்கள் பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன.

## 7.3 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

---

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) சியாம்பலாண்டுவ சுகாதார மருத்துவ உத்தியோகத்தர் அலுவலகத்தில் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்த காலாவதியான மற்றும் உரிய தரத்தில் இல்லாத மருந்து மற்றும் பாவனை சிகிச்சை பொருட்கள் அழிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 1994 முதல் 2014 ஆம் ஆண்டு வரை மொனராகலை பிரதேச சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்திடமிருந்து சியாம்பலாண்டுவ குடும்ப சுகாதார மருத்துவ உத்தியோகத்தர் அலுவலகத்திற்கு கிடைத்திருந்த வகைக்குரிய 54 வகையான உபகரணங்கள் உருப்படிகள் பயன்பாட்டிலிருந்து புறப்பட்டிருந்த போதிலும் கைதவிர்க்கப்பட்டிருக்கவில்லை.

(இ) பதுளை பிரதேச சுகாதார சேவை பணிப்பாளர் அலுலகத்திற்கு சொந்தமான 06 வாகனங்கள் பாவனையிலிருந்து ஓரமாக்கப்பட்டு 05 ஆண்டுகள் கடந்திருந்த

போதிலும் அதனை திருத்தி பயன்படுத்த அல்லது பொருத்தமான வகையில் கைதவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) மாவட்ட வைத்தியசாலைகள் அலகுகள் மற்றும் கிராமிய வைத்தியசாலைகள் முகாமைத்துவம் செய்வது தொடர்பான செயற்பாட்டுக் கோவையின் 19 ஆம் அத்தியாயத்தின் பிரகாரம் காலாவதியான மருந்துகள் சாதாரண மருந்துகளிலிருந்து வெவ்வேறாக களஞ்சியப்படுத்த வேண்டிய போதிலும் கிராந்துரு கோட்டை பிரதேச வைத்தியசாலையில் ரூபா 402,552 பெறுமதியான காலாவதியான மருந்துகள் மற்றும் காலாவதியாவதற்கு அன்மையிலுள்ள 13 மருந்து வகைகள் மற்றும் பதுளை பிரதேச சுகாதார சேவையில் பணிப்பாளர் அலுவலகத்தின் காலாவதியான மருந்து வகைகள் தொடர்பாக அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) மேற்படி செயற்பாட்டுக் கோவையின் 19.7 ஆம் அத்தியாயத்தின் பிரகாரம் மருந்துகள் நிலத்திலிருந்து குறைந்தது 10 செ.மி உயரத்திலும் ஏதேனும் சுவருக்கு 35 செ.மி தூரத்தில் வைக்கப்பட்ட வேண்டிய போதிலும் பதுளை பிரதேச சுகாதார சேவையில் பணிப்பாளர் அலுவலகத்தின் அதிகளவிலான மருந்து வகைகள் திறந்த வெளியில் வைக்கப்பட்டிருந்தன.

(ஊ) கிராந்துருகோட்டை பிரதேச வைத்தியசாலையால் வேண்டப்படாத ரூபா 4,497,928 பெறுமதியான 128 மருந்துகள் மற்றும் கோரப்பட்ட அளவினை விட கூடுதலாக ரூபா 2,733,118 பெறுமதியான 85 மருந்து வகைகள் வழங்கப்பட்ட காரணத்தினால் கருத்திற் கொள்ளக்கூடியளவு மருந்துகள் இருப்பொன்று களஞ்சிய வளவில் வைக்கப்பட்டிருந்தன. அம்மருந்துகளை பயன்படுத்தாமலும் மிகைகள் காணப்பட்டமையாலும் மருந்துகள் காலாவதியாவதற்கான ஆபத்தொன்று காணப்பட்டது.

## 7.4 விளைவற்ற/ குறைப்பயன்பாடுடைய சொத்துக்கள்

---

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளின் போது மகப்பேற்று சிகிச்சை நிலையங்களுக்கு பகிர்ந்தளிப்பதற்காக மொனராகலை பிரதேச சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்திலிருந்து சியாம்பலாண்டுவ சுகாதார மருத்துவ உத்தியோகத்தர் அலுவலகத்திற்கு கிடைத்திருந்த 8 வகைக்குரிய உபகரணங்கள் மற்றும் 79 பொருட்களும் சியம்பலாண்டுவ சுகாதார மருத்துவ அதிகாரி அலுவலகப் பிரிவின் குடும்ப சுகாதார சேவைகள்

உத்தியோகத்தர்களுக்குரிய 8 விடுதிகளும் பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2009 ஏப்ரல் 16 ஆந் திகதிய 2009/09 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் பிரகாரம் சுகாதார சேவைகள் திணைக்களத்திற்குரிய 135 நிறுவனங்களுக்காக 2017 நவம்பர் 14 ஆந் திகதி கைவிரலடையால இயந்திரங்களை கொள்வனவு செய்வதற்காக ரூபா 7,695,000 செலவினமொன்று மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் 2018 ஆகஸ்ட் 31 ஆந் திகதி வரை பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) பதுளை இருதய நோய் காசநோய் தொடர்பாக Total Lung Capacity மற்றும் DLCO ஆகிய பரிசோதனைகளை மேற்கொள்வதற்காக ஊவா மாகாணத்திற்காக உள்ள ஒரே Cosmed Quart PFT 4 Lung Function இயந்திரம் 2016 ஆம் ஆண்டு முதல் செயலற்றுக் காணப்பட்டது.

(ஈ) மஹியங்கனை ஆதார வைத்தியசாலையின் 03 இரத்த வடிகட்டல் இயந்திரங்கள் விளைவற்றும் சத்திர சிகிச்சை வைத்தியரொருவர் இல்லாமை காரணமாக ENT பிரிவு 04 மாதங்கள் காலமாக செயற்படாமல் காணப்பட்டது.

(ஊ) மஹியங்கனை ஆதார வைத்தியசாலையின் அதிதீவிர சிகிச்சை பிரிவிற்காக 2016 நவம்பர் 28 ஆந் திகதி ரூபா 4,500,000 இற்கு கொள்வனவு செய்யப்பட்டிருந்த Continuons Renal Replacement Therapy இயந்திரத்துடன் 10 வருட காலம் பூராகவும் வழங்குனர் நிறுவனத்திலிருந்து பாவனை பொருட் பாகங்களை பெற்றுக் கொள்வதற்கு முடியுமாக இருந்த போதிலும், அதற்காக சட்டரீதியான உடன்படிக்கையொன்று கைச்சாத்திடப்படாத காரணத்தினால் பாவனை பொருள் பகுதிகளை பெற்றுக்கொள்ள முடியாமையால் 2017 ஆம் ஆண்டு முழுவதும் இயந்திரம் செயற்படாமல் விளைவற்றுக் காணப்பட்டது.

**7.5 ஒப்பந்த நிர்வாகத்திலான குறைபாடுகள்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

**(அ) ப/சுஜாதா மகா வித்தியாலயத்தின் 90x25 இரண்டு மாடி நிர்மாணம்**

பிரதி பிரதம செயலாளரினால் (பொறியியல் சேவை) ஒப்பந்த நிறுவனமொன்றுடன் 2015 மே மாதம் 05 ஆந் திகதி ரூபா 8,327,039 தொகைக்கு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்தது. 15 அத்தியவசிய

விடயங்கள் மதிப்பீட்டில் உள்ளடக்கப்படாமையால் ரூபா 727,983 தொகையான மேலதிக மற்றும் வெளி வேலைகளுக்காக 2015 நவம்பர் 24 ஆந் திகதி மேலதிக மதிப்பீடொன்று அங்கீகரிக்கப்பட்டிருந்தது.

**(ஆ) வெளிமட ஆதார வைத்தியசாலையின் புதிய மருத்தகத்தை நிர்மாணித்தல்**

---

பிரதி பிரதம செயலாளரினால் (பொறியியல் சேவை) முதலாவது தடவை கேள்வி கோரி தெரிவு செய்யப்பட்ட ஒப்பந்தகாரருக்கு 2016 யூன் 27 ஆந் திகதி ரூபா 11,126,986 இற்கு வழங்கப்பட்ட ஒப்பந்தம் இரத்துச் செய்யப்பட்டிருந்ததுடன் இரண்டாவது கேள்விதாரருடன் தொடர்பு கொள்ளாமல் இரண்டாவது முறை கூறு விலை கோரப்பட்டிருந்தது. முதலாவது கேள்வி கோரலின் போது முதலாவது மற்றும் இரண்டாவது கேள்விதாரரின் கூறுவிலை விபரங்களின் வித்தியாசம் ரூபா 58,733 ஆக இருந்ததுடன் இரண்டாவது தடவை சமர்ப்பித்த ஒரே கேள்வி தாரரின் கூறு விலை ரூபா 14,012,035 ஆக இருந்தது. இரண்டாவது கேள்வி நிராகரிக்கப்பட்டு மூன்றாவது கேள்வி கோரி ரூபா 13,957,973 இற்கு ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்தது. முதலாவது கேள்வி கோரலின் போது நிர்மாண வேலையின் பொறியியலாளர் மதிப்பீட்டுப் பெறுமதி ரூபா 15,483,914 ஆக இருந்ததுடன் இரண்டாவது கேள்வி கோரலின்போது பொறியியலாளர் மதிப்பீட்டுப் பெறுமதி ரூபா 18,164,039 என ரூபா 2,725,125 ஆல் அதிகரித்தது.

**(இ) ஊவா மாகாண சபையின் உத்தியோகத்தர்களுக்காக ஏழு மாடிகளுடன் கூடிய வீடமைப்பு தொகுதியினை நிர்மாணித்தல்**

---

பிரதி பிரதம செயலாளரினால் (பொறியியல் சேவை) பெறுகை மேற்கொள்ளப்பட்டு தெரிவு செய்யப்பட்ட ஒப்பந்தகாரருக்கு 2016 திசெம்பர் 06 ஆந் திகதி ரூபா 88,184,632 இற்கு ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்ததுடன் ஒப்பந்தக்காரர் உடன்படிக்கையில் கையொப்பமிடாமல் தவிர்ப்புச் செய்திருந்தார். பிணை பாதுகாப்பு பொறுப்பின் பெறுமதியான ரூபா 940,000 தொகையை அரச வருமானத்திற்கு எடுப்பதனை தவிர்ப்பதற்கு ஒப்பந்தகாரரால் பதுளை மாவட்ட நீதிமன்றத்தில் தொடரப்பட்டிருந்த வழக்கில் மீண்டும் கூறுவிலை கோருவதற்கு ஏற்படும் செலவினமான ரூபா 248,380 தொகை அறவிடப்பட்டு இணக்கப்பாட்டிற்கு வரப்பட்டிருந்தது.

இரண்டாவது கூறுவிலை கோரப்பட்டு தெரிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரருக்கு 2017 ஆகஸ்ட் 31 ஆந் திகதி ரூபா 112,169,390 இற்கு ஒப்பந்தம் வழக்கப்பட்டிருந்ததுடன் முதலாவது கூறுவிலை கோரும் போது வழங்கப்பட்ட ஒப்பந்தத்தின் பெறுமதியை விட ரூபா 23,984,758 ஆல் அதிகரித்திருந்தது.

இரண்டாவது கேள்வி கோரலலுக்கான தேசிய பத்திரிகை அறிவித்தலின் பிரகாரம் ஏற்றுக்கொள்ளக்கூடிய வர்த்தக வங்கியொன்றல்லாத காப்புறுதி நிறுவனமொன்றின் கேள்வி பாதுகாப்பு பிணை, தொழில்நுட்ப குழு மதிப்பீட்டின் போது ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்ததுடன் காப்புறுதி நிறுவனம் சமர்ப்பித்த ரூபா 34,688,317 தொகை பாதுகாப்பு முற்பணம் மற்றும் செயலாற்றல் பிணைப்பொறுப்பு சட்டரீதியானதல்ல என உறுதிப்படுத்தப்பட்டது.

**(ஈ) ப/பண்டாரவெல தமிழ் மகா வித்தியாலயத்தின் 110x25 இரண்டு மாடி நிர்மாணம்**

---

கால்நடைவளங்கள் மற்றும் கிராமிய சமூக அபிவிருத்தி அமைச்சின் நிதி ஏற்பாட்டின் பேரில் கட்டிட நிர்மாணத்திற்காக 2013 திசெம்பர் 31 ஆந் திகதி பிரதி பிரதம செயலாளர் (பொறியியலாளர் சேவைகள்) ஒப்பந்த நிறுவனமொன்றுடன் ரூபா 15,798,212 ஆன உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்தது. நிர்மாண வேலையின் மதிப்பீடு தயாரிக்கும் போது ரூபா 3,301,621 ஆன தேவையான 4 விடயங்கள் கைவிடப்பட்டிருந்தன. 2017 செப்தம்பர் 20 ஆந் திகதிய பரிசோதனை சந்தர்ப்பம் வரையில் கட்டிடத்தின் நிர்மாண நடவடிக்கைகள் கைவிடப்பட்டிருந்ததுடன் கீழ் மாடியின் சுவர்களின் பகுதி நிர்மாணிக்கப்பட்டு (slab) கொங்ரீட் தளம் இடப்பட்டிருந்தது. 04 ஆண்டு காலப்பகுதியில் வேலை பூர்த்தி செய்யப்படாமையால் பயன்பாட்டிற்கு எடுக்க முடியாமல் காணப்பட்டதுடன், கட்டிடம் நிர்மாணிக்கப்பட்டிருந்த காணியில் காணப்பட்ட பழைய கட்டிடத்தின் 03 வகுப்பறைகள் மற்றும் நூலகம் என்பன அகற்றப்பட்டிருந்தன. அரைப்பங்கு பூர்த்தி செய்யப்பட்ட கீழ் மாடியில் ஆபத்துடனான சூழலொன்றில் பாடசாலை மாணவர்கள் கல்வி கற்று வருகின்றனர் மேலும் கட்டிடத்திற்குள் மழை நீர் வழிந்தோடிக் கொண்டிருந்ததுடன் கொங்கிரீட் தளத்தின் (slab) வளைவுக் கம்பிகள் சிதைவடைந்திருந்தன.

**(உ) ப/தம்பேதன்ன இலக்கம் 02 தமிழ் மகா வித்தியாலயத்தின் ஆசிரியர் விடுதி நிர்மாணம்**

---

ஊவா மாகாணத்தின் கல்வி பணிப்பாளரினால் ப/தம்பேதன்ன இலக்கம் 2 தமிழ் மகா வித்தியாலயத்தின் பாடசாலையின் அபிவிருத்தி சங்கத்துடன் 2006 நவம்பர் 10 ஆந் திகதி ரூபா 1,530,980 இற்கு ஆசிரியர் விடுதியொன்றை நிர்மாணிப்பதற்காக உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்தது. நிர்மாணம் 2007

பெப்ரவரி 10 ஆந் திகதி பூர்த்தி செய்யப்பட வேண்டிய போதிலும் 2017 செப்தெம்பர் 20 ஆந் திகதி வரையிலும் வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. 10 ஆண்டுகளாக அரைப்பங்கு பூர்த்தி செய்யப்பட்டிருந்த கட்டிடத்தின் பகுதிகள் உருக்குலைந்து காணப்பட்டதுடன் பயன்பாட்டிற்கு எடுக்க முடியாத நிலைமையில் காணப்பட்டது. கட்டிடங்களின் நிர்மாணத்திற்காக முதலாவது பகுதிக் கொடுப்பனவாக ரூபா 337,175 செலவிடப்பட்டிருந்ததுடன் செலவிடப்பட்ட பணம் விளைவற்ற செலவினமொன்றாக மாறியிருந்தது.

(ஊ) புத்தள கைத்தொழில் கிராமத்திற்கு செல்லும் வீதி, உள்ளக வீதி காபட் இடுதல், ஓரக்காண் மற்றும் கம்பி வேலி நிர்மாணம்

---

மேற்படி நிர்மான வேலைக்காக கைத்தொழில் மற்றும் வர்த்தக அலுவல்கள் அமைச்சினால் 2016 திசெம்பர் 14 ஆந் திகதி ஊவா மாகாண வீதி அபிவிருத்தி திணைக்களத்திற்கு ரூபா 22,122,500 நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் பரிந்துரையின் பேரில் ஒப்பந்தத்தை வழங்குவதற்கு 2017 யூன் 01 ஆம் அமைச்சின் பெறுகை குழு பரிந்துரை வழங்கியிருந்தது. 2017 யூன் 25 ஆந் திகதி வரையிலும் அதற்கான அங்கீகாரம் கிடைக்காமையால் கேள்விதாரர் இரண்டாவது தடவை சமர்ப்பிக்கப்பட்ட கேள்விப் பாதுகாப்பு பிணையின் காலமும் கடந்திருந்தது.

**(உ) கலஉட, கந்தேகட்டிய – கரமெட்டிய வீதி நிர்மாணம்**

---

உலக வங்கியின் உதவியின் கீழ் செயற்படுத்தப்பட்ட மேற்படி நிர்மாண வேலையின் கொடுப்பனவு தொடர்பாக உருவாகியிருந்த சர்ச்சைக்குரிய நிலைமையை தீர்த்து வைப்பதற்காக தீர்ப்பாளர் ஒருவர் தொடர்பு படுத்தப்பட்டிருந்ததுடன், தீர்வு செய்யும் போது 1995 இன் 11 ஆம் இலக்க தீர்ப்பாளர் சபை அதிகாரச் சட்டத்தின் 15(1) பிரிவிற்கு முரணாக நிறைவேற்றப்படாத வேலைகளுக்காக ரூபா 214,336,256 தொகை கொடுப்பனவு செய்யத் தீர்மானிக்கப்பட்டிருந்தது.

**7.6 பதவியணியினர் நிர்வாகம்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

**7.6.1 அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளபடியான பதவியணியினர் எண்ணிக்கை**

2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஊவா மாகாண சபையின் அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளபடியான ஊழியர் எண்ணிக்கை தொடர்பான நிலைமை கீழே காண்பிக்கப்படுகின்றது.

**(அ) மாகாண சபை, அமைச்சுக்கள்/ திணைக்களங்கள் மற்றும் அலுவலகங்கள் (பாடசாலை பதவியணியினர் நீங்கலாக)**

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்டது | உள்ளபடியானது | வெற்றிடங்கள் | மிகை |
|---|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 1336 | 940 | 396 | - |
| (ii) | மூன்றாம் நிலை | 298 | 189 | 109 | - |
| (iii) | இரண்டாம் நிலை | 7520 | 6432 | 1088 | - |
| (iv) | ஆரம்ப நிலை | 5295 | 5185 | 110 | |
| (v) | ஏனையோர் (அமைய தற்காலிக/ ஒப்பந்த அடிப்படை) | 52 | 955 | - | 903 |
| | மொத்தம் | 14501 | 13701 | 1703 | 903 |

**(ஆ) பாடசாலை பதவியணியினர்**

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட | உள்ளபடியான | வெற்றிடங்கள் | மிகை |
|---|---|---|---|---|---|
| (i) | அதிபர்கள் | 1077 | 750 | 327 | - |
| (ii) | ஆசிரியர்கள் | 16384 | 17456 | - | 1072 |
| (iii) | உதவிப் பதவியணியினர் | 1326 | 1768 | - | 442 |
| (iv) | ஏனைய (அமைய / தற்காலிக / ஒப்பந்த | | | | |

| | | | | |
|---|---|---|---|---|
| அடிப்படை | - | 1117 | - | 1117 |
| | ------- | -------- | -------- | ------- |
| **மொத்தம்** | 18787 | 21091 | 327 | 2631 |
| | ===== | ===== | ====== | ====== |

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 27 மீளாய்வாண்டின் இறுதிவரை ஆசிரியர் சேவையில் 1072 மற்றும் உதவி பதவியணியினருக்கு 442 பேரும் 1117 அமைய, தற்காலிக ஒப்பந்த ஊழியர்கள் 1117 பேரை மிகைத்து சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்த போதிலும் அதற்காக முறையான அங்கீகாரமொன்று பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ii) அதிபர் பதவிகளில் 327 வெற்றிடங்கள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை

நிதிப்பிரமாணம் 95(1) இன் பிரகாரம் மிகை, அமைய மற்றும் ஒப்பந்த ஊழியர்களின் சேவையின் அவசர மற்றும் அத்தியவசிய என மற்றும் சம்பளக் கொடுப்பனவிற்காக செலவின தலைப்புகளில் மேற்கொள்ளப்பட்ட நிதி ஏற்பாடு போதியளவில் காணப்படவிலையென்பது உறுதிப்படுத்தப்பட்டவில்லை.

### 7.6.2 மாகாண சபை ஏனைய பதவியணியினர் நிர்வாகம்

---

(அ) காணி ஆணையாளர் திணைக்களத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரின் பிரகாரம் 3 நில அளவையாளர்கள் பதவிகளுக்கு வெற்றிடங்கள் காணப்பட்ட போதும் 7 அளவை உதவியாளர்கள் விளைவற்ற வகையில் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

(ஆ) 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பாடசாலை பதவியணியினர் தவிர ஊவா மாகாண சபையில் ஊழிய வெற்றிடங்களின் எண்ணிக்கை 1703 ஆகவும் மிகை ஊழியர் எண்ணிக்கை 903 ஆகவும் இருந்தன. பாடசாலை பதவியணியின் ஊழியர், வெற்றிடங்களின் எண்ணிக்கை 327 ஆகவும் மிகை ஊழியர் எண்ணிக்கை 2631 ஆகவும் இருந்தன.

(இ) தாபன விதிக்கோவையின் II ஆம் அத்தியாயத்தின் 133 உப பிரிவின் பிரகாரம் பதில் கடமை நியமனமொன்று தற்காலிக தீர்வொன்றாக இருந்த போதும் எம்.என் 03 சம்பள அளவிற்குரிய முதலாவது தரத்தின் விளையாட்டு உத்தியோகத்தர் ஒருவர் இலங்கை நிர்வாக சேவையின் II/III ஆம்

தரத்திற்குரிய மாகாண விளையாட்டுப் பணிப்பாளர் பதவியில் 2014 மே 02 ஆந் திகதி முதல் முழு நேர கடமைகளை நிறைவேற்றுவதற்காக நியமிக்கப்பட்டிருந்தார்.

(ஈ) இலங்கை திட்டமிடல் சேவையின் III ஆம் தரத்தின் உத்தியோகத்தரொருவர் 2012 பெப்ரவரி 01 ஆந் திகதி முதல் இலங்கை நிர்வாக சேவையின் I ஆம் தரத்தின் கைத்தொழில் பணிப்பாளர் பதவிக்காக பதில் கடமை புரிய நியமதிக்கப்பட்டிருந்தார்.

(உ) புடவைக் கைத்தொழில்துறைக்கு 20 சிரேஷ்ட மதியுரையாளர் பதவிகள் அங்கீகரிக்கப்பட்டிருந்த போதிலும், 13 பதவிகள் வெற்றிடங்களாக காணப்பட்டன.

(ஊ) (i) 2006 சனவரி 04 ஆந் திகதிய சீஎஸ்ஏ/பீ1/40 ஆம் இலக்க சனாதிபதி சுற்றறிக்கையின் பிரகாரம் அமைச்சரவையின் அமைச்சரொருவருக்கு உரித்தான படிகள் மற்றும் பதவியணியினர் மாகாண சபையின் அமைச்சர்களுக்கும் உரித்தாக்கப்பட்டிருந்தது. சுற்றறிக்கையின் 1.3 ஆம் பந்தியின் பிரகாரம் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினருக்குரிய ஆட்சேர்ப்பு விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சினால் மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும் மாகாண சபையின் அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களிலிருந்து நியமிக்கப்பட்ட 14 உத்தியோகத்தர்களுக்கு 2017 ஆம் ஆண்டின் போது ரூபா 5,085,227 தொகை சம்பளமாக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. அமைச்சர்களுக்கான 40 பேருடன் கூடிய மிகை பதவியணியினரொன்று விடயத்திற்கு அமைச்சுக்களிலிருந்தும் ஊவா மாகாண சபையின் ஏனைய நிறுவகத்திலிருந்தும் இணைக்கப்பட்டிருந்ததுடன் 1990 இன் 02 ஆம் இலக்க ஊவா மாகாண சபை (சம்பளம் மற்றும் படிகள் கொடுப்பனவு) நியதிச் சட்டம் மற்றும் 2006 சனவரி 04 ஆந் திகதிய சீஎஸ்ஏ/பீ1/40 ஆம் இலக்க சனாதிபதி சுற்றறிக்கைக்கு இணங்கும் வகையில் ஊவா மாகாண சபையின் தலைவருக்கு உரித்தாக வேண்டிய பதவியணியினருக்காக பதவியணியினர் சபை செயலகத்தினால் வழங்கப்பட்டிருக்கையில் பதுளை வலய கல்வி அலுவலகத்தின் ஆய்வுகூட ஊழியர் ஒரு இணைக்கப்பட்டு அந்த அலுவலகத்திலிருந்து 2014 பெப்ரவரி மாதம் முதல் 2017 ஒக்தோபர் மாதம் வரை ரூபா 864,090 சம்பளம் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

(ii) 2009 மார்ச் 24 ஆந் திகதிய NSCC/2/1/6/111(11 தொகுதி) ஆம் இலக்க தேசிய சம்பளங்கள் மற்றும் ஊழியர் ஆணைக்குழுவின் செயலாளரின் கடிதத்தின் பிரகாரம் ஊவா மாகாண சபையின் சகல உறுப்பினர்களுக்கும் உரித்தாக வேண்டிய பதவியணியினருக்காக சபை செயலகத்தினால் சம்பளம் கொடுப்பனவு செய்யப்பட்டிருக்கையில் அதற்கு மேலதிகமாக 11 உறுப்பினர்களால் ஊவா மாகாண சபைக்குரிய ஏனைய நிறுவனங்களிலிருந்து 11 உத்தியோகத்தர்கள் இணைக்கப்பட்டு அந்த உத்தியோகத்தர்களுக்கு 2017 ஆம் ஆண்டின் போது மாகாண சபை நிதியத்திலிருந்து ரூபா 4,707,855 சம்பளம் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

(iii) 2006 சனவரி 04 ஆந் திகதிய சீஎஸ்ஏ/பீ1/40 ஆம் இலக்க சனாதிபதி சுற்றறிக்கையின் பிரகாரம் மாகாண சபையின் உறுப்பினரொருவருக்கு உறுப்பினர் பதவியணியினரின் எழுதுனர், தட்டெழுத்தாளர் மற்றும் அலுவலக உதவியாளர் 03 பேருக்காக சம்பளம் கொடுப்பனவு செய்ய முடியுமான போதிலும் ஊவா மாகாண சபையின் விடயத்திற்கு பொறுப்பான அமைச்சர்கள் மற்றும் தலைவருக்காக அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினருக்கு மேலதிகமாக உறுப்பினரொருவர் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் 03 பேர் வீதம் 18 உத்தியோகத்தர்கள் இணைக்கப்பட்டு சபை செயலகத்தினால் 2017 ஆம் ஆண்டில் ரூபா 6,272,360 சம்பளமாக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது

### 7.6.3 கல்வி தொடர்பான பதவியணியினர் நிர்வாகம்

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ப/சுஜாதா மகா வித்தியாலயத்தின் சம்பளப் பட்டியலிருந்து சம்பளம் பெறும் மூன்று ஆசிரியர் நீண்டகாலமாக வேறு அலுவலகங்களுக்கு இணைக்கப்பட்டிருந்தனர்.

(ஆ) மாகாண பாடசாலைகளின் பிரகாரம் இலங்கை அதிபர் சேவையின் 124 அதிபர்கள் மேலதிகமாகக் காணப்பட்டதுடன் 442 அதிபர்களுக்கு பற்றாக்குறையொன்று காணப்பட்டது.

(இ) 2016 சனவரி 07 ஆந் திகதிய 01/2016 ஆம் இலக்க கல்வி அமைச்சு செயலாளரின் சுற்றறிக்கைக்கு முரணாக பாடசாலையில் இருக்க வேண்டிய

ஆசிரியர்களின் எண்ணிக்கை மிகைத்து ப/விஹாரமஹாதேவி மகளிர் கல்லூரியில் 15 பேர் சேவையில் ஈடுபட்டிருந்தனர்.

(ஈ) 2016 சனவரி 07 ஆந் திகதிய 01/2016 ஆம் இலக்க கல்வி அமைச்சு செயலாளரின் சுற்றிக்கையின் பிரகாரம் ஆசிரியர், ஒருவர் ஒரு வாரத்திற்கான காலப்பகுதியில் 30-35 இடைப்பட்ட பாடவேளைகள் கற்பித்தல் நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டிய போதிலும், ப/ஸ்ரீ சங்கபோதி வித்தியாலயத்தின் 25 ஆசிரியர்கள் மற்றும் ப/ சுஜாதா மஹா வித்தியாலத்தின் 45 ஆசிரியர்கள் அப்பாட வேளைகளை மேவுகை செய்திருக்கவில்லை. எவ்வித பாடவேளைகளும் மேவுகை செய்யாத ஆசிரியர்களின் எண்ணிக்கை 12 ஆக இருந்தன.

(உ) 2016 சனவரி 07 ஆந் திகதிய 01/2016 ஆம் இலக்க கல்வி அமைச்சு செயலாளரின் சுற்றறிக்கைக்கு முரணாக ப / சுஜாதா மஹா வித்தியாலயத்தில் 28 மிகையான ஆசிரியர்களும் ப/ஸ்ரீ சங்கபோதி வித்தியாலயத்தில் 18 மிகையான ஆசிரியர்களும் இலங்கை அதிபர் சேவை சேவையின் மிகைகளின் எண்ணிக்கை 01 ஆக இருந்தது.

## 7.7 வங்கி கணக்கிணக்கம்

### வழங்கப்பட்டிருந்த போதிலும் கொடுப்பனவிற்காக வங்கிக்கு சமர்ப்பிக்கப்படாத காசோலைகள்

(அ) 04 வலயக் கல்வி அலுவலகங்களின் 4 வங்கிக் கணக்குகளுக்குரிய 2017 திசெம்பர் 31 அந் திகதியில் உள்ளபடியாக வழங்கப்பட்ட திகதி முதல் 6 மாதங்களை மிகைத்த ரூபா 57,891 பெறுமதியான 36 காசோலைகளும் 2018 ஏப்ரல் 30 ஆந் திகதி தயாரிக்கப்பட்ட வங்கிக் கணக்க கூற்றின் பிரகாரம் ரூபா 50,374 பெறுமதியான 27 காசோலைகள் தொடர்பாக ஊவா மாகாண நிதி விதி 396(ஈ) இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மாகாண கல்வித் திணைக்களத்தின் வங்கிக் கணக்கில் 6 மாதங்களைக் மிகைத்த ரூபா 324,445 பெறுமதியான கொடுப்பனவு செய்யப்படாத 250 காசோலைகள் மாகாண நிதி விதி 396 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படாமல் வைப்புக் கணக்கிற்கு மாற்றப்பட்டிருந்தது.

## 7.8 உள்ளூராட்சி நிறுவனங்களின் மேற்பார்வை

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு, மீளாய்வாண்டில் மற்றும் முன்னைய ஆண்டிற்காக ஊவா மாகாணத்தின் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு கிடைக்க வேண்டிய ஆதனவரி மற்றும் ஏனைய நிலுவை வருமானங்களின் கூட்டுத்தொகை ரூபா 266,263,635 ஆக இருந்தது.

(ஆ) 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு, அறவிடப்பட வேண்டிய நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் ரூபா 94,940,975 மற்றும் முத்திரைக் கட்டணங்கள் ரூபா 118,671,367 தொகை உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு செலுத்த வேண்டியிருந்தது.

(இ) ஊவா மாகாணத்தின் உள்ளூராட்சி மன்றங்களின் உத்தியோகத்தர்களுக்கும் பிரதிநிதிகளுக்கும் விதிக்கப்பட்ட மிகை விதிப்பிற்காக 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு, ரூபா 6,417,562 தொகை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 8. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

## 8.1 செயல்நடவடிக்கைத் திட்டம்

நியதிச் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட 12 நிறுவனங்களுக்காக மீளாய்வாண்டிற்கான செயல்நடவடிக்கைத் திட்டங்கள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 8.2 உள்ளகக் கணக்காய்வு மற்றும் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக்கள்

(அ) 2009 யூன் 09 ஆந் திகதிய DMA/2009(1) ஆம் இலக்க முகாமைத்துவ மற்றும் கணக்காய்வுத் திணைக்களத்தின் சுற்றறிக்கை பிரகாரம் 72 நிறுவனங்கள் மீளாய்வாண்டிற்காக கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக் கூட்டங்களை நடாத்தியிருக்கவில்லை.

(ஆ) உள்ளகக் கணக்காய்வு மூலம் வெளிப்படுத்தப்பட்டவை தொடர்பாக முகாமையினால் முறையான நடவடிக்கைகள் எடுக்கப்படாதிருந்ததுடன் அது தொடர்பாக போதியளவான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 8.3 பெறுகைகள் திட்டம்

நியதிச் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட 12 நிறுவனங்களினால் மீளாய்வாண்டில் பெறுகை திட்டங்கள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 8.4 சுற்றாடல் மற்றும் சமூக பொறுப்பினை நிறைவேற்றுதல்

ஊவா மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளரால் கழிவுப்பொருட்களை வெளியேற்றுவதற்காக சிகிச்சை பொறியொன்று (Treatment plant) ஸ்தாபிக்கப்பட்டிருக்கவில்லை

### 8.5 ஆண்டறிக்கையினை சமர்ப்பித்தல்

கடந்த சில வருடங்களில் ஊவா மாகாண சபையின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைகளை மாகாண சபைக்கு முன்னிலைப்படுத்தலின் நிலமை பின்வருமாறு ஆகும்.

| ஆண்டு | அறிக்கை வழங்கப்பட்ட திகதி | சபையில் முன்வைக்கப்பட்ட திகதி |
|---|---|---|
| 2012 | 2014.08.27 | 2015.04.23 |
| 2013 | 2015.02.10 | 2017.04.28 |
| 2014 | 2015.09.21 | 2016.07.14 |
| 2015 | 2016.12.06 | 2017.02.20 |
| 2016 | 2017.08.21 | 2017.09.28 |

## 9. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பில் மாகாண சபையின் விஷேட கவனம் கோரப்படுகின்றது.

| | முறைமை | குறைபாடுகள் |
|---|---|---|
| (அ) | கணக்கீடு | பொதுக் கணக்கீட்டு நியமங்கள் பின்பற்றப்பட்டிருக்கவில்லை |
| (ஆ) | வருமான முகாமைத்துவம் | புதிய வருமான மூலங்கள் இனங்காணாமை மற்றும் நிலுவை வருமானம் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | உள்ளகக் கட்டுப்பாடு | i. மேற்பார்வை பலவீனமாக இருந்தமை<br>ii. பின்தொடர் நடவடிக்கை செயற்படுத்தப்படாமை<br>iii. போதியளவு கணக்கேடுகள் பயன்படுத்தப்படாமை |
| (ஈ) | உள்ளூராட்சி அதிகார சபைகளின் மேற்பார்வை | மிகை அறவீடு நிலுவை வருமானம் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமை |
| (உ) | ஊழியர் முகாமைத்துவம் | i அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரை மிகைத்து ஊழியர் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டமை<br>ii மிகை பதவியணியினர் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தமை |
| (ஊ) | சொத்துக்கள் முகாமைத்துவம் | i சகல சொத்துக்களும் இனங்காணப்பட்டு கணக்கீடு செய்யப்படாமை மற்றும் சகல சொத்துக்களும் பயன்படுத்தாமை |
| (எ) | ஒப்பந்த முகாமைத்துவம் | i முறையான பெறுகை செயற்பாடு பின்பற்றப்படாமை<br>ii தாமதமாக செயற்திட்டங்கள் ஆரம்பித்தல்<br>iii ஒப்பந்தங்களை அறிவிப்பு செய்யும் போது முகாமையாளர்களால் சரியான தீர்மானம் எடுக்கப்படாமை<br>iv மேற்பார்வை பலவீனம் |